Registered at the G. P. O. as a Newspaper ★ விலை சதம் 15

# ஈழநாடு

National Tamil Daily

மலர் 7 | விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 8. ஜ. ஆகிர் 21. (24-10-65) ஞாயிற்றுக்கிழமை | இதழ் 254

முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் நீல சோப்
தற்பொழுது
புதிய ரசாயனப் பொருட்கள்
சேர்க்கப்பட்டு
பெரிய சைஸ் கட்டியாக
தயாரிக்கப்படுகின்றது.
20 சதத்திற்கு எங்கும் கிடைக்கும்.
கூடிய உடுப்புகளை சலவை செய்யலாம்.

# ஜிஜிக்கு ஐநாவில் பதவி?

## நியமனம் வழங்குமாறு அரசாங்க கட்சியினர் வற்புறுத்தல்

### பேச்சுவன்மை படைத்த திறமைசாலிகளே ஐ. நா.வில் இருக்கவேண்டும் என கருத்து



கொழும்பு, சனி

இலங்கை தூதுகோஷ்டிக்குத் தலைமை தாங்கி, ஐக்கிய நாடுகள் சென்று, மகாசபைக் கூட்டத்தில் இலங்கைசார்பில் மிகச்சிறப்பாக- மற்றைய பிரதிநிதிகளைக் கவரக்கூடிய முறையில் உரை நிகழ்த்திய யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி., ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைப் பிரதிநிதியாக நியமிக்கப்படலாம் என நம்பப்படுகிறது. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை ஐ. நா. வுக்கான இலங்கைப் பிரதிநிதியாக நியமிகக வேண்டுமென்று அரசாங்கக்கட்சியைச் சேர்ந்த பல அங்கத்தவர்கள் மந்திரிசபை உறுப்பினர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் இலங்கைத் தூதுகோஷ்டிக்குத் தலைமை தாங்கிச் சென்ற திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், மகாசபைக் கூட்டத்தில் சர்வதேச அமைதிக்கு இலங்கையின் சார்பில் பலயோசனைகளைக் கூறி பல தடவைகள் உரை நிகழ்த்தியிருந்தார். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தெரிவித்திருந்த கருத்துக்கள் பல வெளிநாட்டுப் பத்திரிகைகளில் முக்கியத்துவம் அடைந்திருந்தன. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், ஐக்கிய நாடுகள் மகாசபையின் கூட்டத்தில் இலங்கையின் சார்பில் பல்வேறு பிரச்னைகள் குறித்து விளக்கமாகவும் மிகவும் திருப்திகரமாகவும் கவரத்தக்க முறையில் பேசியிருந்ததை உள்ளூர் வெளியூர் பத்திரிகைகள் வெளியிட்டிருந்ததை ஆதாரமாகக் கெண்டே அரசாங்க கட்சி முக்கியஸ்தர்கள் பலர், மந்திரி சபை உறுப்பினர்களை இவ்விஷமாக வற்புறுத்தி வருகின்றனர்.

திறமையாக பேசியதன் மூலம் உலக அரங்கில் இலங்கையின் தரத்தை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் ஒருபடி உயர்த்தியுள்ளார் என்று கருதும் இவர்கள்; திரு. ஜி. ஜி. போன்ற திறமைசாலிகளை- பேச்சுவன்மை நிறைந்தவர்களையே ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைபபிரதிநிதியாக நியமிக்கவேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். இதுவிஷயம் குறித்து பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுடன் பேச்சுக்கள் நடத்தவும் அவர்கள் ஒழுங்கு செய்துள்ளனர்.

தற்போதைய ஐ. நா. சபை கூட்டத்தொடரில் கலந்துகொண்ட உலகப் பிரதிநிதிகளுக்குள் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மிகவும் சிறந்த பேச்சாளர் என கணிக்கப்பட்டுள்ளார்.

இவரை ஐ. நா. வில் நியமிக்க, அரசாங்கத்தை ஆதரிக்கும் அரசியல் வட்டாரங்களும் விருப்பம் தெரிவித்துள்ளன.

தற்போது ஐ. நா. வின் இலங்கைப் பிரதிநிதி திரு. ஆர். எஸ். எஸ். குணவர்த்தனவாகும்.

## காஷ்மீர் பிரச்னை

### ஆபிரிக்க[illegible] நாடு [illegible]வாதிக்காது

அக்ரா, அக். 23

இந்திய-பாகிஸ்தான் பிரச்னையை விவாதிப்பதில்லை என்று இங்கு கூடியுள்ள ஆபிரிக்க உச்சிமகாநாடு தீர்மானித்துள்ளது. ஆபிரிக்க தலைவர்களின் இந்த முடிவு இந்தியாவுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி என்று பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆபிரிக்க தலைவர்களின் உச்சிமகாநாடு நேற்று முன்தினம் இங்கு ஆரம்பமானது.

காஷ்மீர் பிரச்னையை தீர்த்துவைப்பதில் ஆபிரிக்க நாடுகள் முயற்சிக்கும் என்று முன்னர் கருதப்பட்டுள்ளபோதிலும், இந்திய-பாகிஸ்தான் தகராறு தங்களது நாடுகளுக்கு அப்பாற்பட்ட விஷயமாதலால் இதை விவாதிப்பதில்லை என்று இப்பொழுது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கப்பல்கள் எங்கே?

புதுடில்லி, அக். 23

52 பேருடன் சென்ற மூன்று இந்தியக்கப்பல்களை கடந்த சில வாரங்களாக காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கப்பல்களை பாகிஸ்தான் முடக்கி இருக்கலாம் என கருதப்படுகிறது.

## கொழும்பில் சர்.ஒலிவர்

கொழும்பு, சனி

முன்னாள் இலங்கை கவர்னர் ஜெனரல் சர் ஒலிவர் குணதிலாகா நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தார். இங்கு சில தினங்கள் தங்கியிருப்பார்.

## மட்பாண்டத்தொழில் பயிற்சி பெறும் இலங்கையர்

லண்டன், அக். 23


இலங்கையிலுள்ள மட்பாண்டத்தொழிற்சாலை ஒன்றின் நிர்வாகியான திரு. ஆர். சிவானந்தன் கொழும்புத்திட்டத்தின் கீழ் பிரிட்டனில் ஸ்டபோட்ஷயர் தொழில் நுட்பக் கல்லூரியில் மூன்றுவருடப் பயிற்சி பெற்று வருகிறார்.

தங்கொடுவையிலுள்ள தம்பரவில்லாவைச் சேர்ந்த இவர் பதின் மூன்று வருடங்களின் முன்னரும் பிரிட்டன் சென்று மட்பாண்டத்தொழிற் பயிற்சிபெற்றவராவர்.

## கைத்தொழில் மந்திரி யாழ்ப்பாண விஜயம்

கொழும்பு, சனி

கைத்தொழில் கடற்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன அடுத்த சனிக்கிழமை 30-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார்.



விசேஷ விமானத்தில், சனிக்கிழமை காலை 8-30க்கு பலாலி விமான நிலையம் வந்துசேரும் திரு பிலிப் குணவர்த்தன, இங்கு மூன்று தினங்கள் தங்கியிருந்து யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலுமுள்ள பல தொழிற்சாலைகளுக்கும் சென்று பார்வையிடுவார்.

நிகழ்ச்சிகள்:

மந்திரி விஜயம் செய்யும் இடங்கள் வருமாறு: சனிக்கிழமை 30-ம் திகதி: (காலை) மயிலிட்டி, பொயிட்டி, தெல்லிப்பளை வாளித்தொழிற்சாலை, காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, (பிற்பகல்) மாதகல் கரையோரம், வட்டுக்கோட்டை, மண்டைதீவு, வேலணை-செட்டிபுலம், ஊர்காவற்றுறை துறைமுகம், ஊர்காவற்றுறை நெசவுத்தொழிற்சாலை.

ஞாயிற்றுக்கிழமை 31-ம் திகதி: (காலை) சுன்னாகம் தச்சுத்தொழிற்சாலை, கோப்பாய், லையிடன் தொழிற்சாலை, நாவாந்துறை, யாழ்ப்பாண மீன்பிடி துறைமுகம், யாழ்ப்பாணம் ஐக்கிய சமாஜம், (பிற்பகல்) பருத்தித்துறை, தொண்டைமானாறு, நவாலி, சாவல்காடு, கல்லுண்டாய் [illegible] உப்பளம், பொதுக்கூட்டம்.

திங்கட்கிழமை முதலாம் திகதி: (காலை) நல்லூர், இயந்திர இறக்குமதியாளர்கள் தூதுகோஷ்டியை சந்திப்பது.

(பிற்பகல்) பரந்தன் ரசாயன தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், கிளிநொச்சி கிராமமுன்னேற்றச் சங்கம்.

## ஒரே ஈற்றில் மூன்று கன்றுகள்

கொழும்பு, சனி

தலவாக்கலையிலுள்ள கொலிறுாட் தோட்டத்தைச் சேர்ந்த திருமதி பீ. ஸி. இன்ஸ் என்பவருக்கு சொந்தமான பசு மூன்று கன்றுக்குட்டிகளை ஈன்றெடுத்தது. பசுவும், கன்றுகளும் சுகமாக இருக்கின்றன.

## 34 இராணுவத்தினர் சுட்டுக்கொலை

புறூண்டி, அக். 23

கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட திடீர்புரட்சி சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டவர்களில் 34 இராணுவத்தினர் [illegible] கொல்லப்பட்டனர்.

பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைப்பேன் - ரைவுஸ் காய்ச்சல்

இது இரத்த முறிஞ்சிச் சீவிப்பது. இது அதிகமாக பெண்களின் தலைமயிருள் குடி கொள்ளும். ஒருவரிலிருந்து இன்னொருவருக்குத் தொற்ற வல்லது. இது இருப்பதால் ஒருவித நமைச்சல், கடி, நித்திரையின்மை முதலியன உண்டாகும். பெண்பேன் ஈர் எனப்படும். இது மயிர் அடிகளில் ஒட்டும் தன்மையுள்ள முட்டைகளையிடும். ஒரு கிழமையில் இவை குஞ்சுகளாகும். குஞ்சுகள் இரண்டு வாரத்திலே இனப் பெருக்கம் செய்ய ஆரம்பிக்கும்.

## உபத்திரவங்கள்

இரத்தம் உறிஞ்சுவதால் தலைப்பாரம், தலைக்கனதி, தலையில் ஏதோ இருப்பது போன்ற உணர்ச்சி, நித்திரையின்மை, சொறிவு என்பனவற்றுக்கு ஆளாவாள். சொறிவது சொடுகு வருவதற்கு ஒரு வழியாகிறது. எப்பொழும் கோபித்துக் கொள்ளுவாள். சாப்பாட்டில் பிரியமின்மை. கணவன், பிள்ளைகளில் விருப்பு-வெறுப்பு இல்லாத மனப்பான்மை உண்டாகிறது. எந்தவேளையும் தலையை நோண்டிக்கொண்டு பார்ப்பதற்கு சித்தப்பிரமை அல்லது பேய் பிசாசுபிடித்தவள் போன்ற தோற்றத்துடன் நிற்பாள். (Typhus - Fever) ரைவுஸ் என்னும் ஒருவகை காய்ச்சலும் ஆளைப் பீடிக்கிறது. இந்த ரைவுஸ்காய்ச்சல் அடிக்கடி வரும். இதனுல் பேன் பிடித்தவருக்கு பலமின்மை, உடல் வாட்டம் முதலியன ஏற்படும்.

## பேனைக் குறைக்கும் வழி

1. நாளாந்தம் பேன் பார்ப்பதாலும் நல்ல சீப்பினுல் அடிக்கடி தலையைக்கோதுவதினுலும், தலைமயிரை நன்ருக வெட்டிவிடுவதாலும் பேனைக்குறைக்கலாம்.

2. மண்ணெண்ணையையும் ஒலிவ் எண்ணையையும் சம எடை கலந்து அடுத்தடுத்து 3 நாள் பிற்பகலில் நன்ருகத் தேய்த்தபின்னர் காலையில் வேப்பம்நெய்-2 அவுன்ஸ், ஆமணக்கம்நெய்- 2அவுன்ஸ் பச்சைக்கர்ப்பூரம்- 1/2 களஞ்சு, மிளகாய்க்கொட்டை-1 களஞ்சு முதலியன கூறப்பட்டபடிசேர்த்துத் தலையில் தடவி அதன் பி நன்கு சூடான எலுமிச்சம் பழம் தேய்த்து ஸ்நானம் செய்யவும். இப்படி 3 நாட்களுக்குச் செய்ய, பேனை அகற்றலாம்.

ஒவ்வொரு நாளும் ஸ்நானம் செய்யும்பொழுது ஒரு டம்ளர்நிரம்பிய தண்ணீரில் சோடாவை அல்லது 2 மேசைக் கரண்டி நிரம்பிய காடியைக் கலந்து கூந்தலைக் கழுவியபின்னர் நல்லநெருங்கிய பற்களுள்ள சீப்பினுல் வாரி வருவதே சிறந்ததாகும். பெண்கள் 2 நாட்களுக்கொருமுறைதலைமயிரை நன்ருகக் கழுவிச் சுத்தம் பண்ணுவது அவசியம். இளவெந்நீரும் காரச்சத்தும் சேர்த்து தலையில் தடவிய

## நோயும் சிகிச்சையும்—4

நல்ல சோப்பு (Soap) உபயோகித்துமுழுகவும். இப்படி 3 நாள் செய்யக் குறையும்.

3. இளம் சூடான வின்னுரியை (Vinegar) மயிரில் தடவுவதனுலும் பேன்கள் இறந்துவிடும்.

4. லொறெக்ஸேன் (Lorexane) என்னும்மருந்தை மயிரில் தடவி ஸ்நானம் செய்வதால் பேனை அறவே அகற்றலாம்.

5. இவைகள் ஒன்றுமில்லாதவிடத்து டெற்ரோல் சம எடை நீர் கலந்து மயிரில் தடவியபின்னர் 1 மணி கழித்தபின்பு-பின்னர் குளிர்ந்த நீரை விட்டுஅலசிக்கொள்ளவேண்டும். மயிர் நன்ருகக் காய்ந்த பிறகு ஏதாவது நல்ல எண்ணைவகைகளைத் தேய்ப்பது சிறந்ததாகும். மயிர் இயற்கையில் அதிக வழுவழுப்புள்ளதாக இருந்தால் அல்கோஹோலிக் ஹெயர் லோஷன் (Alcoholic – Hair Lotions) உபயோகிக்கவேண்டும். இதனுல் இம்மருந்துகள் மண்டையிலுள்ள எண்ணைக்கிரந்திகளைச் சுருங்கப்பண்ணி எண்ணை ஊறுவதற்கும் பேன்களைக் கொல்லவும் உதவியாக இருக்கும். காலை, மாலையில் தலையை நன்ருகச்சீவிப் பிரஷ்செய்யவேண்டும். சீப்பு பிரஷ் முதலியன சுத்தமாகவும், மற்றவர்கள் பாவிக்காதபடியும் கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டியன.

சமண சன்னியாசிக்குச் சீலைப்பேன் பிடித்த கதை போல ஒரு பெண்மணிக்குப் பேன்பிடித்தால் தர்மசங்கடத்திற்கு உவமை கூறுதல் வழக்கம்.

**க. வேல்மணி**

அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரி, கொழும்பு

### ரைவுஸ் காய்ச்சல் (Typhus-Fever)

பேன் உள்ளவருக்குக் காய்ச்சல் வருவதாக இருந்தால் அது ரைவுஸ் காய்ச்சல் எனப்படும். அதற்கு முன்கூறிய பேன் கொல்லும் முறைகளைக் கையாண்டபின்னர்,

பெரிய வெற்றி வேலாயுதம், தங்க ஏலாதி, மகா ஏலாதி, மிருத்த சஞ்சீவி, கஸ்தூரிமிருத்தியாதி, பெரிய கோரோசனைமுதலியவற்றில் ஏதாவது ஒரு மருந்தில் 2 குளிகைவீதம் தினம்3வேளை இஞ்சிச்சாற்றில் உரைத்துக் கொடுக்கவும். நோயாளிக்கு காய்ச்சல் விட்டபின்னர் சாப்பாடு கொடுத்தல் நல்லது. இது ஒரு நாள் அல்லது இரண்டு நாள் காயும் காய்ச்சலாகும். காய்ச்சல் விட்டதன் பின்னர் பால், மாமிசரசம், தோடம்பழச் சாறு முதலியன கொடுக்கலாம்.

# வரி விளம்பரம்

### திருமண அழைப்பு

லோகநாதன்- அதிர்ஷ்டம்

ஐப்பசித் திங்கள் 15-ம் நாள் (31-10-65) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி20நிமிடத்திலிருந்து 7 மணி 40நிமிடம்வரை உள்ள சுப வேளையில் எமது புத்திரி திருநிறை செல்வி கௌரிக்கும் மேலைப் புலோலி திரு. க. அதிர்ஷ்டம் தம்பதிகளின் புத்திரன் திருநிறை செல்வன் தருமரத்தினத்திற்கும், பருத்தித்துறை, வல்லிபுர ஆழ்வார் கோவிலில் திருமணம் நடைபெறும். அவ்வமயம் உறவினர்களையும், நண்பர்களையும் ஆங்கு வருகை தந்து தம்பதிகளை அசீர்வதித்து சபையைச் சிறப்பிக்குமாறும், மணமகள் இல்லத்தில் உடனடியாகத் தொடரும் விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகின்றேம். செ.லோகநாதன் தம்பதிகள், தென்புலோலியூர், பருத்தித்துறை. 1174

அதிர்ஷ்டம்- லோகநாதன்

ஐப்பசித்திங்கள் 15-ம் நாள் (31-10-65) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி 20நிமிடத்திலிருந்து 7 மணி 40நிமிடம்வரை உள்ள சுபவேளையில்எனதுபுத்திரன்திருநிறை செல்வன் தருமரத்தினத்திற்கும், தென்புலோலியூர் திரு. செ. லோகநாதன் தம்பதிகளின் புத்திரி திருநிறை செல்வி கௌரிக்கும், பருத்தித்துறை, வல்லிபுர ஆழ்வார் கோவிலில் திருமணம் நடைபெறும். அவ்வமயம் உறவினர்களையும், நண்பர்களையும் ஆங்கு வருகை தந்து தம்பதிகளை ஆசீர்வதித்து சபையைச் சிறப்பிக்குமாறும், மணமகள் இல்லத்தில் உடனடியாகத் தொடரும் விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகின்றேன். திருமதி செ. அதிர்ஷ்டம், மேலைப் புலோலி, பருத்தித்துறை. 1175

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### நன்றி நவிலல்

25 ஆண்டுகளாக, யாழ்ப்பாணம் ஐக்கிய மாகாண வங்கியில் சிருப்பராகக் கடமை ஆற்றி இளைப்பாறி சென்ற 12-10-65ல் இவ்வுலகவாழ்வை நீத்த எனது கணவர் கந்தவனம் பொன்னம்பலம், மயிலிட்டிதெற்கு, அவர்களின் ஈமக்கிரியைகளில் நேரில் பங்குபற்றியவர்களுக்கும், தந்திகள், கடிதங்கள் மூலம் அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எனது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். திருமதி பொ. விசாலாட்சி, பொன்னம்பலவாசம், மயிலிட்டி தெற்கு. 1177

### தேவை

ஸ்ரோர் கீப்பர் உடனே தேவை. சம்பளம் ரூபா 150/- பிணைப்பணம் ரூபா 1500/- ரொக்கம் உடனே செலுத்தக் கூடியவர் 28-10-65க்கு முன் நேரில் வரவும். சாலி கோப்பறேஷன், 30, 32, பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 1178

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் இருக்கும் யாழ்ப்பாடிஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு திறமை வாய்ந்த மனேஜர் தேவை. அனுபவத்தையும் திறமையையும் பார்த்துச்சம்பளம் நிர்ணயிக்கப்படும். கூட்டுறவுப் பயிற்சி, மேலதிக தராதரமாகக் கவனிக்கப்படும். பிணை ரொக்கம் ரூபா1000/- விண்ணப்பதாரர்கள்தங்கள் தராதரங்களைக் குறித்து, 5-11-65-க்கு முன் காரியதரிசி, யாழ்ப்பாடி ஐக்கிய பண்டகசாலை, 241, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1172

வெளிவேலை கவனிப்பதற்கு அனுபவம் வாய்ந்த ஆண், பெண் பிரதிநிதிகள் (Field Representatives) தேவை. மாதச்சம்பளமும் கொமிஷனும் கொடுக்கப்படும். 28-10-65க்கு முன் விண்ணப்பிக்கவும். சாலி கோப்பறேஷன், 30, 32, பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 1176




# மலிவு விற்பனை

1-11-65 முதல்

நவீன

வீட்டுத் தளபாடங்களுக்கு

சிறந்த ஸ்தாபனம்

# பாஷன் பேணிஷிங் பலெஸ்

(தளபாட மாளிகை)

57, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.


# இவர்களுக்குகயரோக ஆபத்து அதிகம்!

ஒரே மாதிரியான உருவத் தோற்றமுள்ள 'இரட்டையர்'களைப் பற்றி ஒரு சிறிய ஆராய்ச்சி.

இரட்டையர்களில் இரண்டு வகையுண்டு. வெவ்வேறு 'ஸெல்'களிலிருந்து தோன்றும் உடன் பிறப்பு இரட்டையர்கள் ஒருவகை. ஒரே 'ஸெல்'லிலிருந்து தோன்றும் ஒருமை இரட்டையர்கள் மற்றெருவகை. இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள் குறைவாகவே இருக்கிருர்கள் மொத்தம் பிறக்கும் குழந்தைகளில் ஒருசத விகிதத்தினரே இரட்டையர்களாக இருககிருர்கள். ஒருமை இரட்டையர்களின் எண்ணிக்கை அதில் 1/3 பங்கு ஆகும்.

இரட்டைக் குழந்தைகள் பிறப்பது சாதாரணமான நிகழ்ச்சி. சில சமயங்களில் மூன்று, நான்கு அல்லது ஐந்து (அபூர்வமாக) குழந்தைகளும் பிறக்கலாம். ஐந்து குழந்தைகளும் உயிர் வாழ்ந்து ஆரோக்கியமாக வளர்ந்ததற்கு ஒரேயொரு உதாரணந்தான் இருக்கிறது.

ஒருமை இரட்டையர்கள் தோற்றத்தில் ஒரே மாதிரியாக இருப்பார்கள் இரண்டு சம பாகங்களாகப் பிரிந்த ஒரே 'ஸெல்'லிலிருந்து இருவரும் தோன்றுவதுதான் இந்த வியத்தகு ஒற்றுமைக்குக் காரணம். மரபுக் குணங்களுக்கு அடிப்படையான 'ஜீன்'களைக் கொண்ட உட்கருவும் (நியூக்ளியஸ்) இரண்டு சம பாகங்களாகப் பிரிகிறது. எனவே இவர் ... ர மாதிரியான ம... புக்குணங்களைக் கொண்டவர்கள். இவர்களிடையே வெளி... ...ல் லாமல் இரத்தத்தின் உயிரியையிலும் ஒற்றுமைஇருக்கிறது. இவர்களது இரத்தம் ஒரே தொகுதியைச் சேர்ந்தது.

சில சமயங்களில் அறிவாற்றலிலும் ஒற்றுமை காணப்படலாம்.

பிக்கார்டு இரட்டையர்களை இதற்கு ஓர் உதாரணமாகக்குறிப்பிடலாம். இருவருமே விஞ்ஞானிகளாகத் திகழ்ந்தனர்.

மற்றெரு உண்மை; இரட்டையரைச் சில நோய்கள் எளிதாகப் பீடிக்கின்றன. நாளமில் சுரப்பிகள் இவர்களுக்குச் சரியாக வேலைசெய்யாதது, இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இரட்டையர்களைக் கொண்ட 308 குடும்பங்களில் சுமார் 2534 மக்கள் பரிசோதனை செய்யப்பட்டனர். சாதாரண குழந்தைகளைக் காட்டிலும் இரட்டையர்களிடையே காசநோய் (க்ஷயரோகம்) மூன்று மடங்கு அதிகமாகத்தோன்றுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது.

## அற்புதக் காமிரா!

மையிருளில் படம் எடுக்கும் சினிமா காமிரா ஒன்று சோவியத் யூனியனில் செய்யப்பட்டுள்ளது. விசேட உணர்வுகொண்ட எலக்ட்ரான் பொருள் அதில் உள்ளது.

மையிருளில் பிரயாணிக்கும் ... டைமுறையைப் பட பிடித்துள்ளது இக்கமிரா. இக்கமிராவினுல் நுண்ணுயிர்களை இருளில் படமெடுக்க முடியும்; சாதாரண கமிராவால் முடியாது.

## வைரம் கொழிக்கும் நிலா!

முதன்முதலாக சந்திரனை எட்டும் அண்டவெளி வீரருக்காக, அங்கே பெரிய வைரக்குவை காத்துக் கொண்டிருக்கலாமென்று இலண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ். ஆர். தோலன்ஸ்கி கூறுகிருர்.

இப்போதைக்கு அக் கருத்து வெறும் ஊகமாக இருந்தபோதிலும் சந்திரனிலிருந்து திடீரென்று வைரக்கற்கள் வந்து குவியுமால் வைரத்தின் விலை குறைந்து போகும் என்று உலகின் பல பகுதிகளில் உள்ளவைர வணிகர்கள் கவலைகொண்டுள்ளனர்.

''சந்திரனில் ஏராளமாக வைரங்கள் இருந்தாலும், அவற்றை எப்படிப் பெறுவது என்பது குறித்தோ, அவற்றைப் பூமிக்குக் கொண்டு வருவதில் உள்ள இடர்ப்பாடுகளைக்குறித்தோ எவ்விதமான கருத்தையும் இப்போது கூறிவிட முடியாது'' என்று பத்திரிகைக் கட்டுரையொன்றில் அப் பேராசிரியர் குறிப்பிட்டிருக்கிருர்.

அவற்றை (வைரங்களை) எளிதாக எடுக்கமுடியலாம். சந்திரனிலுள்ள ஏராளமான சிறிய பள்ளங்களுக்குள்ளும் அவற்றின் விழிம்புகளிலும் வைரங்கள் தாராளமாகக் கிடைக்கலாம் என்பது நம்பிக்கையான ஊகமாக இருக்கிறது.

○

ஒரு மனிதனைப் படிப்பிக்கும்போது ஒருவருக்கு மாத்திரமே கல்வியறிவு கிடைக்கிறது. ஒரு பெண்ணுக்குக் கல்வி புகட்டும் போது ஒரு குடும்பம் முழுவதும் கல்விபெற முடிகிறது.

— சீனப் பழமொழி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குறிஞ்சி நில மக்களுடன் குலவிய குமரன்

**மறுநாட்காலை** வள்ளி நாயகியைக் காணவில்லை என்றசெய்தி வேட்டுவ சேரியையே ஒரு கலக்குக் கலக்கியது. வேடுவ அரசனுகிய நம்பியும் வேடுவர்களும் போர்க்கோலம் கொண்டவர்களாய் வள்ளிநாயகியைத் தேடிச்சென்ருர்கள். பூஞ்சோலையில் வள்ளி நாயகி யாரோ ஒரு ஆடவனுேடிருத்தலைக் கண்டு கொண்டார்கள். அவர்கள் இருவரையும் சூழ்ந்துகொண்டு, அம்பு, வேல் முதலிய ஆயுதங்களை வீசியெறிந்தார்கள். முருகப்பெருமான் பாங்கரில் நின்ற சேவல் ஆர்ப்பரித்தது. வேடுவர் யாவரும் இறந்து வீழ்ந்தார்கள் இந்த நேரத்தில் நாரதமுனிவரும் அங்கு வந்து சேர்ந்தார். அருளுந் தன்மையுடைய முருகன் வேடுவர்களை உயிர்பெற்றெழச் செய்தார்.

## வேடரின் பலவித உணர்ச்சிகள்

குறிஞ்சி நிலமக்களிடையே களவொழுக்கம் இருந்துவந்ததை பண்டைய தமிழ் நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. ஆனுல் வேடுவர்கள் அறியாமல் வள்ளி நாயகி தனது காதலனேடு சென்றது தங்களுக்கு ஒரு வசையாகும் என வேடுவர் கருதினுர்கள். கவர்ந்தவர் தமது குலதெய்வமாகிய முருகனே என்பதை அறிந்தும் கூட, தங்கள் குலத்திற்கு இது ஒரு வசைதான் என அவர்கள் கருதினுர்கள். வேடுவ அரசன் முருகப்பெருமானை நோக்கிக் கூறுவதைப் பார்ப்போம்.

''அடுந்திறல் எயினர்சேரி
யளித்திடு நீயே யெங்கள்
மடந்தையைக் கரவில்
வெளவி வரம்பினை
யழித்துத் தீரா
நெடுந்தனிப் பழியதொன்று
நிறுவினை புதல்வர்கொள்ள
விடந்தனை யன்னை
யூட்டின்
விலக்கிடு கின்ருரு
முண்டோ''

தாயினும் சாலப்பரிவுடையவன்இறைவன். காப்பாற்ற வேண்டியவனே குற்றம் செய்யலாமா என்று கேட்கும் வார்த்தையில் நம்பியரசனுக்கு தம் குல ஒழுக்கத்தில் உள்ள பற்று மிளிர்கின்றது. வேடுவ அரசனின் வேண்டுகோளின்படி முருகப்பெருமான் வள்ளிநாயகியுடன் வேடுவசேரிக்குத் திரும்பி வருகிருர். வேடுவசேரியில் தங்கியுள்ள வேடுவர்கள், சிவபெருமான் குமாரராகிய முருகப்பெருமானே வள்ளிநாயகியைக் கவர்ந்து சென்றவரென்றும் நம்பி அரசன் கேள்விப்படி விவாகம் செய்து முறைப்படி அழைத்துச் செல்ல வந்திருக்கிருர் என்பதையும் அறிகிருர்கள். முருகனே தம் குலத்தில் பெண்கொள்ள வந்தமையால் பெருமகிழ்ச்சியடைகிருர்கள். ஆனுல் தம் குல முறை தவறி தம் பெண் அழைத்துச் செல்லப்பட்டமையால் ஏற்பட்ட அவமான உணர்ச்சியும் கோபமும் இன்னும் முற்றும்நீங்கிவிடவில்லை. இந்தநிலையை,

''...சிறுகுடிதனிலுற்ருேர்
பொங்குவெஞ்சினமு
நாணு மகிழ்ச்சியும்
பொடிப்ப நின்ருர்''

எனக்கச்சியப்பர் தெளிவாக எடுத்துக் காட்டுகிருர்.

## கண்களால் பெற்ற பயன்

முருகப்பெருமானின் அருட்பார்வையினுல் வள்ளி நாயகிக்கு தெய்வப்பெண்ணின் அழகிய வடிவம் வந்துற்றது. நாரதரேகுருவாக இருந்து விவாகக்கிரியைகள் யாவற்றையும் செய்வித்தார். தெய்வத்தன்மை பொருந்திய இத்திருமணக் கோலத்தை நம்பி தமது கண்களால் கண்டான். மானிடதேகம் இறைவன் தொண்டுக்காகவே படைக்கப் பெற்றது. இறைவனை ''ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள'' தரிசித்தனர் அடியார்கள். ''எடுத்த பொற்பாதமும் காணப் பெற்ருல் மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே'' என்ருர் நாவுக்கரசர். முருகப்பெருமான் தன் தெய்வத் திருக்கோலத்தைக காட்டிய தன்மையால் ஓரளவு ஞான அறிவைப் பெற்றுக் கொண்டான். இறைவனது திருக்கோலத்தைக் கண்டு தரிசித்தலே கண்களின் பயன் என்ற உண்மையை அறிந்து கொண்டான். உண்மையை அறிந்து

**வ. குகசர்மா**

திருமணக் கோலத்தைக் கண்டதன்மையால் அவன் பேரானந்தம் அடைந்தான். அந்தஆனந்தத்தின் அளவை நம்போன்ருேரால் எடுத்துக் கூறமுடியாது.

''உற்றவிவ் விழிகள்
தம்மால் உறுபய
னெருங்கே யின்று
பெற்றன னென்ருன்
அன்னுனுவகை யார்
பேசற் பாலார்''

என்பது கந்தபுராணம்.

## தெய்வயானையும் வள்ளியும்

மணவினை முடிந்தபின்பு வள்ளிநாயகியையும் அழைத்துக்கொண்டு முருகப் பெருமான் தணிகை மலையை அடைந்தார். தணிகை மலையிலே ஒரு தடாகம் உண்டு. அந்தத் தடாகத்திலே, காலையிலே ஒரு நீலோற்பல மலரும், மத்தியானத்தில் ஒரு நீலோற்பல மலரும் மாலையில் ஒரு மலருமாக மூன்று நீலோற்பலமலர்கள்மலரும். இவை முருகப்பெருமானது பூசைக்குரிய மலர்களாகும். இவ்வாறு தணிகை மலையின் பல பெருமைகளையெல்லாம் முருகப்பெருமான் எடுத்துக் கூறினுர். சிலநாள் அங்கு தங்கியிருந்து தேவயானை அம்மையார் வசிக்கும் கந்தமலை என்னுமிடத்தை யடைந்தார். தெய்வயானை, வள்ளிநாயகியின் வரவைக் கண்டு முருகப்பெருமானுடன் ஊடினதாகக் கந்த புராணம் கூறவில்லை.

''ஈங்கொரு தமியளாகி
யிருந்திடு வேனு
க்கின்ருேர்
பாங்கி வந்துற்றவாறு
நன்றெனப் பரிவு
கூர்ந்தாள்''

என்றே கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. வெவ்வேருய தன்மையுடைய கங்கை நதியும் யமுனை நதியும் ஒரு கடலிலே சென்று கலக்கின்ற தன்மை போல தேவருலகத்திலே பிறந்த தெய்வயானையம்மையும், வேடுவகுலத்திலே பிறந்த வள்ளிநாயகியும் முருகப் பெருமானுடன் சேர்ந்து கந்தமும் மலரும் போல வேறுபாடற்று இருந்தார்கள்.

## முருகன் ஒரு தரு

முருகப்பெருமான் நல்ல பழங்களைக்கொடுக்கும் ஒரு மரம். கொடுபோலும்சாயலையுடையவர்களும் ஞான சத்தி, கிரியாசத்தியாகிய இரு பெண்களும் அந்த மரத்தைச்சுற்றி வளரும் கொடிகள். உயிர்கள்மேற்கொண்ட கருணையினுலே அருள் என்னும் மலர்களைப் பூத்து. பிறவி வழியைக் காய்த்து இங்கே பிறவி வழியைக் காய்ச்சி என்னும் பொருளில் உள்ளது. பக்குவமுள்ள அடியார்கள் யாவருக்கும் முத்தியென்னும் பழங்களைக் கொடுக்கும் கிரவுஞ்சமாகிய கல்மலையை உடைத்தவர் முருகப் பெருமான், கல் போன்ற வைரம் பொருந்திய எம்முள்ளத்தையும் குடைந்து அருள் நிறைந்த உள்ளமாக்கவல்லவர்.

''கல்லகங் குடைந்த
செவ்வேற் கந்தனுேர்
தருவதாக
வல்லியர் கிரியை ஞான
வல்லியின் கிளையாய்ச்சூழ
பல்லுயிர்க் கருளைப் பூத்து
பவநெறி காய்த்
திட்டன்பர்
எல்லவர்தமக்கும் முத்தி
யிருங்கணி யுதவுமென்றும்.

## வாழ்க சீரடியார்


இவ்வாருக உயிர்களுக் கருளைச் செய்யும் முருகப் பெருமானை நக்கீரர் முதலிய பொய்யில்லாத புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளார்கள். முருகப்பெருமான் இருசக்திகளோடும் எழுந்தருளியுள்ள காட்சியைக் கந்தபுராண ஆசிரியர் பலவாறு உவமை காட்டிப் புகழ்ந்துள்ளார். பாற்கடலில் விட்டுணு மூர்த்தி பூமகள், மலர்மகள் ஆகிய இரு மனைவியரோடும் சர்ப்ப ஆசனத்தின் மீது சிறந்து வீற்றிருக்கும் தன்மைபோல் இருக்கின்றது எனக்கூறுகிருர். முருகப் பெருமானின் வழிபாடு நம்மை தீயவழியில் விடாது நல்வழியிற் செலுத்தி இறுதியில் பேரின்பத்தைக்கொடுக்கவல்லது. அருணகிரிநாதர் போன்ற முருகன் அடியார்கள் இதற்குச்சான்ருகும். பெருமை நிறைந்த முருகப்பெருமான் பாதங்களை நாம் நீங்காத பக்தியுடன் சென்று வணங்குவோம்.

''ஆறிரு தடந்தோள்
வாழ்க அறுமுகம்
வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல்
வாழ்க குக்குடம்
வாழ்கச் செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கும்
வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீரடியரெல்லாம்''

(முற்றும்)

**கந்தபுராணக் கட்டுரைகள் 14**

---




**தெய்வ மகன்:** (சிறுகதைகள்) எழுதியவர்: நாவேந்தன். வெளியிட்டோர்: தமிழ் குரல் பதிப்பகம், ஏழாலை வடக்கு, சுன்னுகம். பக்கம்: 115. விலை: ரூ. 2/00

''உணர்ச்சிகள், அவை தாம் எனக்கு உணவு. கனவுகள் என்வாழ்க்கை. 'கனவுகளாவது வாழ்க்கையாவது, சுத்தப் பைத்தியக் காரத்தனம்' என்கிறீர்களா? சரி, பைத்தியக்காரத்தனம் கலைஞன் முதிசம் என்ருல் வரலாறு அதை மறுக்காத போதுஎனக்கென்னபயம்.''

இவ்வாறு கூறும் நாவேந்தன் தமது இரண்டாவது சிறுகதைத் தொகுதியான 'தெய்வ மக'னில் உணர்ச்சி ஓட்டமும், கனவுகளும், நினைவுகளுமான கதைகள் பலவற்றைப்படைத்து அளித்திருக்கிருர்.

'நினைவுத்திரையின் விரிப்புச்சுருங்குகிறது. எங்கிருந்தோ சுழன்றுவந்த காற்றின் அசைப்பில் பக்கத்து மரத்தின் இலைகள் நெட்டிமுறிகின்றன. அவள் கனவுச் சுகத்தின் அநுபவத்திலிருந்து விடுவித்துக் கொண்டு எழுந்து நடக்கின்ருள். இரவுக் காலத்தில் மின் விளக்குகளால் ஒளிமயமாக விளங்கும் அந்தப் பெண்கள் கல்லூரியும் சூழலும் அவள் பார்வையிலிருந்து மெல்லமறைகின்றது. அவள் தன் அறைக்குள் நுழைந்து அதற்குள் முடங்கி ஐக்கியமாகிருள். ஆனுல் அவள் நெஞ்சத்துப் பிரச்னைகளைமட்டும் மறையாத இரும்புக்கொக்கியாகக் கேள்விக்குறியிட்டுஉரமுற்று உறுத்துகின்றது. ஏனே?(பக்கம் 53).

இதுமாதிரி, சாய்வு நாற்காலியை வீட்டு முற்றத்திலே தூக்கிப்போட்டு அதில் சாய்ந்து வானவெளியில் கண் சிமிட்டும் தாரகைக் கூட்டங்களைநோக்கியவாறே பிறந்த ஊரில் தாய் புத்திர பாசத்தால் செத்து மடிய கொழும்பிலே காதல் கேளிக்கை ஆடிக்களிக்கும் யாழ்ப்பாணத்து இராசையாவையும், பருவத்தேபயிர் செய்யத் தவறியதால் வீட்டுக்குள்ளே சிறைப்பட்டு நெஞ்சம் புழுங்கி ஏங்கி மடியும் கன்னிப்பெண்ணையும், மருதப்பனுல் வஞ்சிக்கப்பட்ட அவனது கள்ளக் காதலி அபலை முத்தம்மாவையும், ரத்த தானம் செய்த நர்ஸ் நளினியையும் அல்பர்ட்டின் நிறைவேருத மனேரதத்தையும், கடவுளும், சாத்தானும் மனிதனைத்தேடிவருகிற விசித்திரமான பாதைகளையும் தெய்வமகன் ஜனனத்தையும் சுற்றி சிந்தனையைப் பறக்கவிட்டு, கனவிலும் நினைவிலும்மூழ்கிப்போகும் கற்பனை மயக்கத்தின் ஓர் இனிய அநுபவத்தைக் கதைகளாகப் படிக்கிருேம் இந்நூலில்.

○

## ஆன்ம யாத்திரை

காரைநகர் செல்வி வை. மனேன்மணி ஞாபக வெளியீடு.

தோற்றம் 25-6-50

மறைவு 26-6-65

மக்கள் மரணதத்துவத்தை உணர்ந்து மரணபயத்தைப் போக்கும் உண்மை நெறி வழி நடக்க முயலவேண்டுமென இந்நூல் அறிவுறுத்துகிறது. இந்நூல் அண்மையில் காலஞ்சென்ற தமது பேர்த்தியும் வைத்தீஸ்வரக் குருக்களின் குமாரத்தியும் [illegible]கிய மனேன்மணியின் நினைவுமலராக அச்சிட்டு இலவசவெளியீடாக பெரியார், ஈழத்துச் சிதம்பராலயப் பிரதமஆசாரியார் சிவஸ்ரீ ச. கணபதீசுவரக் குருக்கள் வெளியிட்டுள்ளார். நிலையற்ற உடம்பினைக் கொண்டு நிலையான வாழ்விற்கு ஆக்கம் செய்ய வேண்டுமென நமக்கு அறிவுறுத்தும் தேவார திருவாசகங்கள், திருமந்திரம், திருப்புகழ், திருக்குறள் முதலான அருட்பாக்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட அருட்பாக்கள் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. திரு. க. இராச்ம சந்திரன் முன்னுரை வழங்கியுள்ளார். நெடுங்காலம் நிலை [illegible] தாம் அற்பகாலத்துள் பெரும் யாத்திரையை முடிக்கவேண்டும். வழியிலே வேடிக்கை பார்த்தால் யாத்திரைமுடியாது என 'ஆன்ம யாத்திரை'யில் பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை குறிப்பிடுகிருர்.

உடல்வாழ்வை ஒரு பயணமாகவும் ஆத்மாவை பிரயாணியாகவும் தெய்வத்தை விமானியாகவும் உருவகித்து 'நான்' என்றகர்வத்தைநீக்கி இறைவனை நம்பவேண்டுமென்ற கருத்தினை 'ஆத்மாவும் கர்மமும்' என்ற கட்டுரையில் திரு. ச. சபாபதி வலியுறுத்திக் கூறுகிருர். உபயோகமற்றசட்டையைக் கழற்றிவீசுதல் போலவும் சாற்றைப் பிழிந்தபின் கரும்பின் சக்கையை நெருப்புக்கு இரையாக்குவது போலவும் உடலின் பயன் நிறைவேறியதும் உடலும் ஆக்கப்படுகிறது. அதையிட்டுக் கவலை கொள்ளல் ஆகாது என்ற கருத்தை திரு. நா. முத்தையா அழகாக விளக்குகிருர். திருவருளின் துணைகொண்டு திருவருளை முன்னிட்டு நடந்தால் சைவ வாழ்க்கைககூடும், அமைதி கிட்டும் என 'சைவ வாழ்க்கை' என்ற கட்டுரையில் திரு. க. சிற்றம்பலம் நமக்கு அறிவுறுத்துகிருர்.

[மதிப்புரை வேண்டுவோர் ஒவ்வொரு புத்தகத்திலும் இரு பிரதிகள் அனுப்ப வேண்டும்.]

சைவமக்களை நிலையான வழிக்கு அழைத்துச் செல்ல அறிவுறுத்தும் கருத்துடைக் கட்டுரைகளையும் கவினுன அருட்பாக்களையும் கொண்டிலங்கும் 'ஆன்ம யாத்திரை' படிப்போர்க்கு மிக்கபயனளிக்கும்.

## தில்லை மண்டூர்ப்பதிகம்

ஆசிரியர்:- புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, விலை: சதம்-25.

தில்லைமண்டூரில் எழுந்தருளியிருக்கும் திவ்வியமுருகனின் கவினையும்கருணையையும் அருள்குழைந்த உள்ளத்துடன் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பதினெருகவிகளில் பாடியுள்ளார். தில்லை மண்டூர்ப்பதிகம் முருகபக்தர்களுக்கு ஒரு சிறந்த பொக்கிஷமாகும்.

## பராசக்தி மாலை

[ஆசிரியர்:-பண்டிதர் செ. சிவப்பிரகாசம்] உலகெலாம் உய்ந்திட உறுதுணைசெய்யும் பராசக்தியின் திருவருளை பண்டிதர் செ. சிவப்பிரகாசம் பராசக்தி மாலையாகத் தொடுத்துள்ளார். இனிமையான இப்பாக்களை நாம் படித்துபரங்கருணைத் தடங்கடலிற் படிந்து இன்புறுவோம்.

○ —'பூ'

## கல்லூரிச் சஞ்சிகை

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த சஞ்சிகை இவ்வருடம் கல்லூரியின் முன்னுள் அதிபர் திரு. வி. வீரசிங்கம் அவர்களின் ஞாபகமலராக வெளியிடப்பட்டுள்ளது.

திரு. வீரசிங்கம், சிறந்த கல்லூரி அதிபராகவும், சமய, சமூக, கூட்டுறவுத் தொண்டராகவும் சேவை புரிந்தது பற்றி திருவாளர்கள் சி. எஸ். நவரத்தினம்,

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
EELA NADU National Tamil Daily Post Box 49 Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone 389
யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி 8உ (24-10-65)

# ஐ. நா. வின் இருபதாண்டு

ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் இன்று இருபதாண்டு நிறைவு தினத்தைக் கொண்டாடுகிறது. தனி மனிதனின் வாழ்வில் இருபதாவது பராயம் துடிப்புள்ள வாலிபப்பராயமாகும். ஐ. நா. ஸ்தாபனமும் இருபதாண்டுகளில் பல சோதனைகளைத்தாண்டி வாலிபப் பராயத்தை அடைந்துள்ளது. சோதனை மிக்க இவ் வருடத்தில் அது சாதிக்க வேண்டியவை பலவுள.

இருபது வருடங்களுக்குமுன் 54 அங்கத்துவநாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனத்தில் இப்பொழுது 117 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இருபது ஆண்டுகளிலும் ஐ. நா. ஸ்தாபனம் நிகழ்த்திய சாதனைகள் என்ன? வருங்காலத்தில் அதன் பொறுப்புகள் என்ன? உலகசமாதானத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை அது எந்த அளவுக்கு நிறைவேற்றியுள்ளது?

அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் கியூபா காரணமாக நெருக்கடியேற்பட்டு மூன்றாவது உலகயுத்தம் தோன்றுமோவென உலகமே கவலையிலாழ்ந்தசமயத்திலும் சூயஸ் நெருக்கடியின்போதும் ஐ. நா. ஸ்தாபனம் தனது கடமையைச் செய்திருக்கிறது. காங்கோவில் உள்நாட்டுப் பிரச்னை தோன்றி அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டநேரத்திலும் சைப்ரஸில் உள்நாட்டுப்பிரச்னை உலகப்பிரச்னையாக உருவெடுக்கவிருந்த சமயத்திலும் ஐ. நா. தலையிட்டு நிலைமையைச் சமாளித்திருக்கிறது. மலேசியா அமைப்புக்காரணமாக இந்தோனேஷியாவுக்கும் மலேசியாவுக்குமிடையில் ஏற்பட்ட யுத்தக்குமுறல் வெடித்துப் பெருந்தீயாகக் கொழுந்து விடாமல் தணித்து வைத்திருப்பதிலும் ஐ. நா.வின் பணியை மறக்க முடியாது. இஸ்ரேல்-அரபுத் தகராறுகளிலும் அது அமைதியைக் காத்துவருகிறது. சமீபத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் ஆரம்பித்த யுத்தத்தில் ஐ. நா. தனது சமாதானப் பணியைச் சரிவர நிறைவேற்ற இன்னமும் பொருமுயற்சி செய்துவருகிறது. நேரடி முயற்சிகள் தவிர அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடிய பல்வேறு தகராறுகளில் ஐ. நா. மறைமுகமாகவும் சமரசமுயற்சிகள் செய்துள்ளது.

சமாதானப்பணிகள் எல்லாவற்றிலும் ஐ. நா. வெற்றிபெற்றுள்ளதென்று கூறமுடியாது. வியட்நாமிலும் மற்றும் ஆசிய நாடுகளிலும் இன்னும் பல பிரச்னைகள் தீராமல் குமுறிக்கொண்டே இருக்கின்றன. எச்சமயத்திலும் இவை வெடித்து உலக அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தக் கூடிய அபாயம் இருக்கிறது. படை குறைப்பு முயற்சியில் ஓரளவுதான் வெற்றி கிடைத்திருக்கிறது. பூமிக்குகீழ் சோதனை நீங்கலாக ஓரளவு அணு ஆயுத சோதனையைத் தடை செய்யும் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுள்ளதென்பது உண்மையே. ஆனாலும் பூரணபடைகுறைப்பை ஏற்படுத்துவதில் இன்னும் வெற்றி கிட்டவில்லை. இதே சமயம் ஓரளவு அணு ஆயுதப் பரிசோதனைத்தடை ஒப்பந்தத்தில் இன்னும் சில நாடுகள் கைச்சாத்திடவில்லை. இந்த ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் தான் சீனாவும் அணுகுண்டுப் பரிசோதனை செய்து அணு வல்லரசாகியுள்ளது. சமாதானத்தைப் பாதுகாக்க ஐ. நா. இதுவரை புரிந்துள்ள பணியைவிட இனிச்செய்ய வேண்டியவை அதிகம். ஐ. நா. விலிருந்து இந்தோனேஷியா வெளியேறியிருக்கிறது. அதுவும் அணுகுண்டுப் பரிசோதனை நடத்தத்திட்டமிடுகிறது. இந்தியா-பாகிஸ்தான் மோதல்முற்றாக நீங்கவில்லை. வியட்னாமில் நிலைமை சீராகவில்லை. இன்னமும் நவசீன ஐ. நா. வில் அங்கத்துவம் பெறவில்லை. சீனாவும் ஐ. நா. வில் இடம்பெறும்வரை அதை ஐ. நா. கட்டுப்படுத்துவது முடியாத காரியம். ஐ. நா. உலக மன்றம். அதில் உலகநாடுகள் அனைத்தும் அங்கம் வகித்தாலே உலக சமாதானத்தைப் பாதுகாக்கமுடியும். புதிய ஆண்டிலாவது நவசீனவுக்கு ஐ. நா. வில் அங்கத்துவம் வழங்கி, வெளியேறிய இந்தோனேஷியாவையும் மீண்டும் சேர்த்து உண்மையான உலகமன்றமாக அது விளங்கவேண்டும். இதே சமயம் உள்நாட்டுப் பிரச்னைகள் என்று ஒதுக்கிவிடாமல், உலகநாடுகள் பலவற்றில் சிறுபான்மை இனத்தவர் நிம்மதியாக வாழவும் ஐ.நா. வழிகாணவேண்டும்.

ஐ. நா. வை பல சோதனைகள் எதிர்நோக்கியுள்ளன. போட்டி ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக சீன கூறிவருகிறது. சமீபத்திய புரட்சி முயற்சிக்குப்பின் இந்தோனேஷியாவின் ஆதரவு போட்டி ஐ.நா. அமைக்க சீனவுக்குக்கிடைக்க மாட்டாதெனினும் ஐ. நா. வில் அங்கத்துவம் பெற முடியாதுள்ள நாடுகள் இன்னும் சில இருக்கின்றன. இரண்டாவது உலகயுத்தம் முடிவடைந்தபின் இரண்டு ஜெர்மனிகள் இருப்பது பிரத்தியட்சமாக இருப்பினும் ஜெர்மனிக்கு ஐ. நா. வில் அங்கத்துவம் கிடைக்கவில்லை. [illegible] வியட்னாமும் கூட தனது குறைகளை ஐ. நா. வில் எடுத்துக்கூறுவதற்கு வழியில்லை. காஷ்மீர் பிரச்னை விரைவில் தீர்க்கப்படாவிட்டால், அதற்கு ஐ. நா. உதவி செய்யாவிட்டால் ஐ. நா. விலிருந்து வெளியேறிவிடப்போவதாக பாகிஸ்தான் வேறு மிரட்டிக்கொண்டிருக்கிறது. போட்டி ஐ. நா. அமைப்பது வெற்றிகரமாக நிறைவேறக்கூடிய விஷயமெனக் கருதமுடியாவிட்டாலும் உலகமன்றமாக விளங்கும் ஐ. நா. ஸ்தாபனத்துக்கு போட்டியேற்படுவது உலகில் நிரந்தர சமாதானத்தை நிலை நாட்டும் ஐ. நா. வின் பணிக்கு உதவியாகாது. ஐ. நா. ஸ்தாபனத்தின் நோக்கத்திலும் இழுக்காகும். உலக நாடுகள் அனைத்தும் [illegible] சிறிய நாடுகளும் சரி ஐ. நா. வில் அங்கத்துவம் பெறுவதன் மூலம் உலகில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்த முடியும். அபிவிருத்தி குறைந்த நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாசாரவளர்ச்சிக்கும் பொருளாதாரமுன்னேற்றத்துக்கும்கூட ஐ. நா. மேலும் சிறந்த முறையில் தனது பணியைச் செய்வதற்கும் உலக நாடுகள் அனைத்தும் ஐ. நா. வில் அங்கம் வகிக்கவேண்டியது அவசியம்.

# ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஞான மொழிகள்

— கே. எஸ். பரிபூரணநந்தர் —

குரங்குக் குட்டியானது தன் தாயைக் கெட்டியாகக் கட்டிப்பிடித்துக்கொள்ளுகிறது. தாய்க்குரங்கு அபாயமான உச்சாரக்கொப்புகளில் தாவிப்பாய்ந்து போகிறது. பூனைக்குட்டியோ அப்படிச்செய்கிறதில்லை. மிகவும் இரக்கமான குரலில் கிடந்து கொண்டு கத்துகிறது. தாய்ப்பூனை தானே வந்து கழுத்தைக் கவ்வித் தூக்கிக் கொண்டு போகிறது. குரங்குக்குட்டி தன்னுடைய பிடியை விடுமானல் கீழே விழுந்து துன்பமடையும். ஏனென்றல் அது தன் பலத்தையே நம்பி இருக்கிறது. பூனைக்குட்டியோ அப்படிப்பட்ட துன்பத்திற்கு ஆளாவதில்லை. காரணம் ஓரிடத்திலிருந்து இன்னேரிடத்திற்கு அதன் தாயே அதைத் தூக்கிக்கொண்டு போகிறது.

ஆண்டவனை மறந்து எல்லாம் என்னல் முடியும்; என்வல்லமைகொண்டு எதையும் சாதிக்க முடியும் என்று எண்ணுவதற்கும், ஆண்டவனைச் சரண் அடைவதற்கும் உண்டான வித்தியாசத்தை இப்படியாக பரமஹம்சர் வலியுறுத்துகிருர்.

ஒரு குடும்பத்திற்கு புதிமாய் வந்த மருமகள் தனது தாமன், மாமி முதலான உறவினர்களுடன் மிகவும் மரியாதையுடன் பணிவிடை செய்து அவர்கள் இகழாது கீழ்ப்படிந்து வந்தாலும் தனது புருஷனையே வெகு பிரியமாகக் கொண்டாடுவாள். இதுபோல உனது இஷ்டதேவதையிடம் முழுவிசுவாசமாயிருந்தாலும் மற்றத் தேவதைகளை இகழாதே. அவர்களைக் கௌரவமாகக்கொண்டாடு. அவர்கள் அனைவரும் ஒரே தெய்வத்தையும் ஒரே அன்பையுமே தெரிவிக்கின்றன.

ஒரு பருந்து மூக்கில் ஒரு மீனைக் கௌவிக் கொண்டிருந்தது. அதனைப் பிடுங்கிக் கொள்வதற்காகச் சில காக்கைகளும் பருந்துகளும் அந்தப் பருந்தைப் பின்தொடர்ந்து கொத்திஆரவாரித்தன. அப்பருந்து எந்தத் திக்கில் போனலும் காகங்களும் பருந்துகளும் பின்தொடர்ந்தே வந்தன. இந்தத் தொந்தரவைப் பொறுக்கமாட்டாத அந்தப் பருந்து தன் வாயில் வைத்திருந்த மீனைப் போட்டுவிட்டது. உடனே வேறொரு பருந்து அந்த மீனைக் கௌவிக் கொண்டது. காகங்களும் இதர பருந்துகளும் இந்தப் புதிய பருந்தைத் தொந்தரவு செய்யத்தொடங்கின. தொந்தரவிலிருந்து விடுபட்ட முதல் பருந்து நிம்மதியாய் ஒரு மரத்தில் போய் உட்கார்ந்திருந்தது. மரத்தடியில் தியானத்தில் உட்கார்ந்திருந்த உத்தம பக்தர் ஒருவர் இந்தப் பருந்தைப் பார்த்துவணங்கினர். ''பருந்தே! நீஎனக்கு குருவாகிருய். உலகப்பற்றுக்களாகிய சுமையை மனிதன் பற்றிக் கொண்டிருக்கும் வரை அவனல் உலக சஞ்சலங்களிலின்றும்தப்பித்துக்கொள்ள முடியாது. அவனுக்கு மனச் சமாதானமே இராதென்று நீ எனக்கு கற்பித்தாய்'' என்ருர்.

வண்ணத்திப் புழு தான் கட்டும் கூட்டுக்குள்ளேயே அகப்பட்டுக் கொள்கிறது. அதுபோல உலகப்பற்றுள்ள ஆத்மா அதனுடைய ஆசைகளாகிய வலையில் சிக்கிக் கொள்கிறது. ஆனல் அந்தப் புழு ஓர் அழகிய வண்ணத்திப் பூச்சியாகப் பரிணமிக்கும் போது அது கூட்டை உடைத்துக் கொண்டு வெளியே வந்து வெளிச்சத்தையும் காற்றையும் ஆனந்தமாய் அனுபவிக்கிறது. அதுபோல விவேகம், வைராக்கியம் என்ற இரண்டு சிறகுகளால் உலகப்பற்றில் உழலும் ஆத்மாவானது மாயையாகிய வலையைக் கிழித்துக் கொண்டு வெளிப்படக் கூடும்

உலகப்பற்றில் ஆழ்ந்திருக்கும் வரையில் ஒருவனுக்குப் பெரும்பாலும் கடவுளைப் பற்றிய உபதேசங்கள் பயன்படுவதில்லை. கொஞ்சக் காலம்வரையில் அவன்உலக சுகங்களை அனுபவிக்கும்படி விட்டுவிடவேண்டும். உலகப் பற்றுச் சிறிதுதளர்ந்ததும் உபதேசம்பயன்கொடுக்கக்கூடியகாலம் அவனுக்கு வரும். அதற்கு முன்னல் செய்யும் உபதேசமெல்லாம் அவனுக்கு யாதொரு பயனையுந் தராதுவீணய்ப்போகும்.

இங்ஙனமாக ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர் பல உபதேசங்களை மறக்கமுடியாதவகையில் உவமைகளோடு பொருத்தமாக எமக்கு அருளுகின்ருர்கள்.

(தொடரும்)

# உலகின் மனச்சாட்சியாகவிளங்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்

20 ஆண்டுகளுக்கு முன் ஒக்டோபர் 24-ல் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் யுத்த ஆபத்திலிருந்து மக்களைக் காப்பதற்காகவும் மனித உரிமைகளையும், மதிப்பையும் ஆண் பெண் சமஉரிமையையும் பெரிய சிறியநாடுகளிடையே சம அந்தஸ்தையும் நிலைநாட்டவும் ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் நண்பர்களாக வாழவும், வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்தி சமூக முன்னேற்றத்துக்கு உதவவும் வேறு பல நல்ல நோக்கத்துக்காகவும் இதை ஸ்தாபித்தார்கள். மேலான இந்த நல்ல இலட்சியங்கள் இன்னும் பூரணமாகக் கைகூடவில்லை என்றலும் இக்குறிக்கோளை நோக்கி உலகம் செல்லவும் கூடுமானவரை சமாதானத்தைப் பாதுகாக்கவும் இந்த ஸ்தாபனம் பெரும்காரியங்களைச்சாதித்துள்ளது. இதற்காக உலக மக்களின் நன்றி இதற்கு உரியதாகும். உதாரணமாக, இன்றைய இந்திய-பாகிஸ்தான் பிணக்கு உலகப் போராக இன்னும் வெடித்து விடாமலிருப்பதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தலையீடே பெரிதளவுகாரணமாக உள்ளது என்று சொல்லவேண்டும்.

இதுமாதிரி, காங்கோ, சூயஸ், இஸ்ரேல், வியட்னும் முதலிய பலபல தகராறுகள் பெரிய யுத்தமாகிவிடாமல் தடுத்து நிறுத்திய பெருமை ஐ. நா. ஸ்தாபனத்தைச் சேரும். இந்த ஸ்தாபனம் மட்டும் இல்லாதிருப்பின் குட்டிச்சண்டைகளும் பெரும் யுத்தங்களாக மாறி மக்களுக்குச் சொல்ல முடியாத இம்சைகளை ஏற்படுத்தி இருக்கும்.

பல ஆசிய, ஆபிரிக்கநாடுகளுக்கும் இன்று அரசியல் சுதந்திரம் கிடைத்துவருகிறதென்றல் அதற்கும் இந்த ஸ்தாபனமே காரணமெனில் அது மிகையல்ல. சுதந்திரம் வழங்குவது மாத்திரமன்றி அந்த சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பெரும்பொறுப்பும் இதனைச் சேருகிறது. ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் தோன்றி ஈராண்டுகளுக்குப் பின்னரே இந்தியாவுக்கும் இலங்கைக்கும் சுதந்திரம் கிடைத்தது. இதற்காக அமெரிக்கா திரைமறைவிலும் ரஷ்யா பகிரங்கமாகவும் ஐ. நா. மேடையிலும் இடித்துக்கூறி வந்தன. பழைய ஏகாதிபத்திய ஆதிக்கம் நீங்கவும் கோடிக்கணக்கான மக்கள் விடுதலை அடையவும் இந்த ஸ்தாபனம்செய்துள்ள பணி அற்ப சொற்பமன்று.

உலகின் ஒரு மனச்சாட்சி போல்விளங்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 54நாடுகளுடன் ஆரம்பமாகி இப்போது அதன் மெம்பர்களின் எண்ணிக்கை இரட்டிப் படைந்துள்ளது. இதில் அங்கம்வகிக்கும் ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இன்னும் சீன மக்கள் குடியரசு இதில் அங்கம் வகிக்காமல் வெளியேதான் நிற்கிறது. அதனல் சீனவின் அட்டகாசம் உலகசமாதானத்துக்கு அடிக்கடி அபாய எச்சரிக்கை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

— "சஞ்சயன்'

# பிரிவுபசாரவிழா

வரணி, சனி

யாழ்ப்பானம் குடமியன் அரசினர் தமிழ் பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. வி. பொன்னையா மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாசாலைக்கு தலைமை ஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அன்னரின் சேவையைப் பாராட்டுமுகமாககுடமியன் கிராம மக்களாலும் பாடசாலை ஆசிரியர்களாலும் அண்மையில் பிரிவுபசார விழா பாடசாலை மண்டபத்தில் வடவரணிச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியராகஇருந்து இளைப்பாறிய பொன். வேற்பிள்ளை தலைமையில் சிறப்பாக நடாத்தப்பெற்றது.

தலைவர் தமது உரையில், மாற்றம் பெற்றுள்ள ஆசிரியரின் சிறந்த பணியே புதிதாக அரசினரால் ஆரம்பிக்கப்பெற்ற இப்பாடசாலையை இன்று எவரும் கூர்ந்து நோக்கக்கூடிய அளவுக்கு கொண்டுவந்துள்ளது என்ருர். தலைவரின் உரையைத் தொடர்ந்து பாடசாலை ஸ்தாபகர் திரு. க. சரவணமுத்து, திரு.அம்பலவாணபிள்ளை, திரு. எஸ். சின்னத்தம்பி, திரு. மா. கதிரித்தம்பி, திரு. ஆ. பெருமையினர் ஆகியோரும் பெற்ருர் சங்கப் பிரதிநிதி திரு. வீரசிங்கமும் பாடசாலை மாணவர்களும் மாற்றம் பெற்றுள்ள ஆசிரியரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

ஆசிரியர்திரு. பொன்னையா தமக்குஅளிக்கப்பெற்றுள்ள உபசாரத்திற்கு நன்றி கூறினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபை கட்டிக் காத்து வரும் உலக சுபிட்சம்

மக்களுக்கு வேண்டியது உணவு. இதனை உற்பத்தியாக்குவதற்கு போதிய நிலமுண்டா, இல்லாவிடின் அதற்கு என்ன பரிகாரம். உணவுக்கான தானியங்களை பயிரிடவும் அதனைபராமரிப்பதற்கும் வசதிகள்உண்டா, இல்லையாயின் அவற்றைப் பெற என்ன ஆகவேண்டுமென்பதை ஆராயவே ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தார் உணவுவிவசாய ஸ்தாபனமொன்றினை நிறுவி கடந்த ஐந்தாண்டுகளுக்குள் 80 நாடுகளுக்கு 2000தூதுக் கோஷ்டிகளை அனுப்பிவாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவிபுரிந்துள்ளனர். எகிப்தியர் புதுரக நெல்லை உபயோகித்து, நைல்நதி நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் விக்கவும் வழிகளை நடைமுறையில் கொண்டு 1966 சர்வதேச அரிசிப் பெருக்க இயக்கத்தைத் தோற்றுவித்துள்ளனர். இவ்வேலைகளில் ஈடுபட்டுவருவோருக்கு தலைமைதாங்கி பட்டினி ஒழிப்புஇயக்கத்தைநடாத்தி வருகிறார் டாக்டர் சென்.

—மு. ஜயரத்தினம்—

இச்சந்தர்ப்பத்தில் சர்வதேச இயக்கமாகிய உணவு விவசாயக்குழுவினர் எவ்வளவில் தம் போதனைகளை சாதனையாக்கியுள்ளனரென்பதை ஆராய்வது சாலச் சிறந்தது. வரண்டபிரதேசங்களாகிய சிரியா, கிரீஸ் ஆகியநாடுகளில் நிலத்தின்



உலகின் மனச்சாட்சிக்கு உறைவிடமாயுள்ள ஐக்கிய நாடுகள் சபை நிலையக் கட்டிடத்தின் ஒரு தோற்றம்.

அரிசி உற்பத்தியை மும்மடங்காக்கியுள்ளனர். புரதச் சத்தில் குறைவான உணவே கிடைக்கும் கம்போடியாவில் முட்டைப் பெருக்கத்தை 50 சதவீதம் அதிகரித்துள்ளனர். இதே போன்று இலங்கையிலும் கூட 1-,000 சதுரமைல் வெற்றுநிலங்களை கமங்களாக்கவும் மேற்படி ஸ்தாபனத்தார் வழிவகை செய்து வந்துள்ளனர்.

ஏறத்தாழ 1400 உணவு விவசாய நிபுணர்கள் தங்கள் உதவிகளை பலநாட்டு அரசாங்கத்தினருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கும் அளித்துள்ளனர். இந் நிபுணர்கள் பல நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் தங்கள் போதனைகளை தாம் செல்லும் நாட்டுமக்களுடன் கலந்து சாதனைகளாக்கிக் கொள்கின்றனர். உணவு உற்பத்தியென்று கூறிக் கொள்ளும்பொழுது தமது நிலத்தைப் பண்படுத்தி உடலுக்கான உணவுச் சத்துக்களை விருத்திசெய்கின்றனர் என்பதேநோக்கம். இந்நோக்கம் எவ்வளவுக்கு நிறைவாகிறதென்பதை கவனிக்கவும் உலகின் அதிகமான ஆசியமக்கள்பாவித்துவரும் அரிசி உற்பத்தியைப் பற்றி ஆலோசிக்கவும், அரிசி உற்பத்தியை கூட்டு

கீழ் உள்ள பிரதேசத்திலிருந்து ஏராளமான நீர் எடுக்கப்பட்டு இவ்விடங்களில் கமம் செய்யப்பட்டு வருகின்றது. பிரேசில் கால்நடைக்காரர்கள் தங்கள் புற்றரைகளிலிருந்து ஐந்து மடங்குகூடியபுல் வளர்ப்பதுடன் எங்கள்கால்நடைகளிலிருந்து பால் உற்பத்தியை நாலு மடங்காக்க முயற்சிக்கின்றனர். சிரியா, ஈராக், ஈரான் ஆகிய மத்தியகிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கோதுமையும் பார்லியும் விளைவிக்கப்பட்டு விளைவற்ற நிலங்களெனக் கருதப்பட்ட நிலங்களை கமச்செய்கைக் குட்படுத்தி வருகின்றனர். இதே போன்று உலகின் பல பாகங்களிலும் மனிதனின் இன்றியமையாத உணவுற்பத்தியை கூட்ட உணவு விவசாய இலாகாவிடாது முயற்சித்து வருகிறது. எங்கெங்கு உணவு விவசாய ஸ்தாபனத்தினர் வேலை செய்து வருகின்றனரோ அங்கெல்லாம் உணவு உற்பத்தி கூடுவதுடன் நின்றுவிடாது நாட்டின் பொருளாதாரமும் விருத்தியடைந்து வந்திருக்கிறது.

இவ்வருடத்தில்21-ம்ஆண்டில பிரவேசிக்கும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் தனது கால எல்லைக்குள் மகத்தான சாதனைகளைச் நிறைவேற்றி

யுள்ளது. இது உலகத்தாற் போற்றற்பாலது இச்சாதனைகளை செயற்படுத்துகையில் ஐக்கியநாடு ஸ்தாபனம் தனது ஒரு மகத்தானசமாதான வீரனை, தியாகசீலனை இழந்தது. அண்மையில் ஐக்கியநாட்டினை பிளவுபடுத்த, இரு அங்கத்துவ நாடுகளுக்கிடையே யுத்தத்தை மூட்ட எடுத்த முயசிற்களுக்கு முட்டுக்கட்டை போட்டு சமாதானம் நிலைக்கச் சூழ்நிலையும் ஏற்படுத்தியுள்ளது. இன்றேல் ஜனநாயகத்திற்கு எதிரான சக்திகள் வெற்றி பெற்று உலகை ஒருபயங்கர யுத்தத்திற்கு இட்டுச் சென்றிருக்கும். அங்கத்துவ நாடுகள் பிறரின் பசப்பு மொழிகளைக் கேட்டு வீண் உயிர்ச்சேதத்துக்கு இடங்கொடாது சகோதரத்துவத்துடனும், சகவாழ்வுடனும் இருப்பின் ஐக்கியநாட்டு ஸ்தாபன அங்கத்துவ நாடுகள் பலதுறைகளிலும் முன்னேறும்.

சிலர், ஐக்கிய நாடுகளும், சிறிய நாடுகளும் அல்லது ஐக்கிய நாடுகளில் சிறிய நாடுகள் என்றெல்லாம் பேசிக்கொள்கின்றனர். இம்முறையில் மக்கள் பேசிக்கொள்வது ஐக்கிய நாட்டு ஸ்தாபன சாஸனத்துக்கு முரணானது என்றே கூறலாம். அங்கு இத்தகைய பாகுபாட்டுக்கு இடமில்லை. பெரிய பரந்த நாடாயிருந்தாலும், செல்வம் செழிக்கும் நாடானாலும், சின்னஞ்சிறிய நாடானாலும் இவை யாவும் ஒரே அந்தஸ்தில் கவனிக்கப்படுகிறது. அண்மையில் சிங்கப்பூர், மாலைதீவு ஆகியவையும் சேர்ந்துள்ளன. அவர்களின் பிரதிநிதிகளின் ஆலோசனையும் பரிசீலனைக்கு எடுக்கப்படும். எனவேதான் சிறிய பெரிய நாடுகள் என்றதைவிட்டு அபிவிருத்தியடையா நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகள் என்று கூறுவது குற்றமாகாது.

## வரப்பெற்றோம்

**கேதாரி ஈஸ்வரர் நோன்பு கதை:** திருக்கோணமலை சிவன்கோவில் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ எஸ். எஸ். சர்மா அவர்களால் கோணேஸ்வர அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. விலை சதம் 25.

கேதாரி ஈஸ்வரர் நோன்பு யாதாமொருவர் தப்பாமல் செய்து வருகிறார்களோ அவர்களெல்லாம் புண்ணியவதி பாக்கியவதியாக இம்மையிற் பாக்கியத்தை அனுபவித்து மறுமையில் மோட்சத்தையும் அடைவார்களென நாரதமகா முனிவர் சொல்லியதாகவுள்ள இந்த நோன்பு பற்றி 18 பக்கங்களைக்கொண்ட இச்சிறிய நூலில் சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பரமேஸ்வரி இந்த நோன்பை 21 நாள் நோற்று ஈஸ்வரரிடப் பாகம் பெற்றாள். இதுவே கேதாரி விரதம் என்பதனையும் இந்தநோன்பை நோற்கிறவர்களுக்கு நினைத்த காரியம் கைகூடும் எனவும் புரட்டாசி மாதச் சுக்கில பட்சத் தசமி தொடங்கி ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்சம் தீபாவளி அமாவாசை வரையான 21 நாள் இதனை அனுஷ்டிப்பது பெண்களுக்கு சௌபாக்யமளிக்குமெனவும் நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

நூலில் சிற்சில அச்சுப் பிழைகள் தவிர்க்கப்பட்டிருப்பின் நன்று.

—கணேசு

# தித்திப்பு

★ தன் பெருமையைப்பற்றி பெண்கள் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தாள் ஒரு 'டைப்பிஸ்ட்'. ''மற்றவர்களைப் போல நான் ரகசியத்தைக் காற்றில் பறக்கவிடுபவளல்ல... நம்பமாட்டீர்களா? நேற்று எங்கள் மனேஜர் கையைப் பிடித்து இழுத்தார். நானே கூச்சலிட முயன்றேன்! ஆனால் அவரோ காலில் விழுந்து இதை வெளியில் சொல்லாதே என்றார். நான் இதுவரை அதை வெளியிடவேயில்லை''

★ சர் வின்ஸ்டன் சர்ச்சிலின் வன்மைமிக்கநாதான் இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனைக் காப்பாற்றியது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. துணிவும் ஆற்றலும்நிரம்பிய சர்ச்சில் கேட்போரை உணர்ச்சிவசப்படுத்தும் விதமாக மட்டும்தான் பேசத் தெரிந்தவர் என்பதில்லை; நகைச்சுவைமிக்கப் பதில்கள் சொல்வதிலும் வல்லவர் அவர்.

மிக அபாயகரமான சந்தர்ப்பங்களில் கூட சர்ச்சிலுக்கு நகைச்சுவை தான்! அவர் பிரதமந்திரியாக இருந்தபோது ஒருமுறை நீராவி வண்டியில் போய்க் கொண்டிருந்தார். வெளியே தலையை நீட்டி முன்னும் பின்னும் வேடிக்கை பார்த்தபடியே சென்றார். வண்டி செல்லும் பாதையை ஒட்டியிருந்த ஒரு இரும்புக் கம்பத்தை அவர் பார்க்கவில்லை. சடாரென்று அவர் பக்கத்திலிருந்த ஒருவர் அவரை உள்ளே இழுத்திராவிட்டால் சர்ச்சிலின் தலை கீழே உருண்டிருக்கும்!

சர்ச்சில் சிரித்துக்கொண்டே சொன்னார்: ''அடடா! மாக்மில்லனுக்குக்கிடைக்கவிருந்த பதவி ஒரு நிமிடத்தில் தவறிவிட்டதே!''

### தாய்நாட்டின் அழைப்பு

★ யாழ்ப்பாணத்தில் மழைக்காலம் ஆரம்பமாகிவிட்டது. மரம் செடிகொடிகளெல்லாம் புதுத்தளிர் விட்டு எங்கும் பச்சைப் பசேலென்ற காட்சி. பெருஞ்சாலைகள் வழியாகப் புதிதாக ஒட ஆரம்பித்திருக்கும் இரட்டைத்தட்டு பஸ்ஸில் மேல் தட்டில் அமர்ந்து பார்த்தால் இருமருங்கும் கண்ணுக்கு குளுமையாக இருக்கிறது. நெளிந்து வளைந்து செல்லும் குறுகலான சாலைகளில் கிராமங்களுக்கூடாக இந்த மாடி பஸ் பவனி வரும்போது பூந்தோட்டத்தை ஊடுருவிப்போய்க்கொண்டிருப்பது போல் ரம்யமாக இருக்கிறது. ஆமாம், மேலே போகப்போக யாழ்ப்பாணத்தின் பெருமையும் உயர்ந்து கொண்டே போகிறது...

கிராமத்தில் ஓரிடத்தில் பஸ் நின்றது. வேலி ஓரமாக வெளியே தெருவில் கிளை பரப்பி நின்ற மாமரத்தின் ஒரு கொம்பு பஸ்ஸின் யன்னலை மருவியது. அதில் நிறையக் காய்கள்; கையை நீட்டி ஒன்றைப் பறித்தேன். உள்ளே இலைகளுக்குள் மறைந்திருந்த அணில் ஒன்று விரண்டு துள்ளிக்குதித்து பஸ்ஸுக்குள் நழுவிவிட்டது. இரண்டு நிமிஷம் மேல் தட்டில் உட்கார்ந்திருந்த பிரயாணிகளுக்கு அது வேடிக்கை காட்டிவிட்டு யார்கையிலும் அகப்படாமலே மறுபடியும் வெளியே தாவிப்பாய்ந்து விட்டது. ஒரு மைல் தூரம் அதற்கு இலவச பஸ் பிரயாணம் ஆச்சு!

★ நெடிதுயர்ந்த மரங்களுடனே நமது வளர்ச்சி போட்டியிடுகிறதா? மாவிட்டபுரம்கோவில் கோபுரத்தின் உச்சித்தட்டில் நின்று பார்த்தால் தென்னைகளும் பனைகளும் நமக்குக்கீழே போய்விடுகின்றன. இந்தநெட்டைப்பனைமரங்களும்கோணல் தென்னைமரங்களும்ஒன்று சேர்ந்துபச்சைக் கம்பளம் விரித்தாற்போலஅப்பொழுதுஎப்படி அழகாகக் காட்சியளிக்கின்றன

★ இரட்டைத்தட்டு பஸ் காங்கேசன்துறை—கீரிமலைப் பாதையில் கடற்கரையோரமாகப் போகிறது. அநேகமாய் கால் நூற்றாண்டுக்கு முன்னதாக இந்தப் பக்கம் காடுமண்டிப்போய்க் கிடந்ததை அப்பொழுது நினைத்துப் பார்க்கிறோம். அக்காலத்தில் இரவில் ஆயிரக்கணக்கில் மின்மினிப்பூச்சிகளே எங்கும் சஞ்சரித்து இருளை இன்னும் பயங்கரமாகக்காட்டும். இன்றைக்கோ மின்விளக்குகள் இருளைத் துரத்தியடிக்கின்றன. இராப்பகல் வித்தியாசமில்லாமல் போய்க்கிடக்கிறது இந்தப் பக்கம் தொழிற்சாலை வட்டாரம் ஆவதற்கு முந்திய அந்நாட்களில் மழைக்காலம் ஆரம்பமாகிவிட்டால் இங்கெல்லாம் கடல்காற்று சிலு சிலு என வீசும். வெள்ள ஈரலிப்பைத் துளியும் காணமுடியாது மலைச்சாரலைப்போல ஒரேகற்பாறைநிலம். பச்சைப் பசேலென்று செடியும் கொடியும் பூவும்தளிருமாக எங்கும் கண்ணுக்கினிய காட்சியே அந்நாளில் புலப்படும். இவ்வழியே கீரிமலை நீருற்றுக்குப்போவோர் கார்களை நிறுத்தி காட்டுக்குள்ளே இறங்கி கத்தாளம் பூவும் அன்னமின்னா பழமும் தேடி நடப்பார்கள். மாரிகாலத்தில் இந்தப்பக்கத்தைப்போல சிறந்த ஆரோக்கியஸ்தலம் உலகில் வேறு எங்கு தேடினாலும் கிடைக்காது அதுமட்டுமா? வரண்ட பாலை நிலம் எனப்பெயர் பெற்ற யாழ்ப்பாண நாடு கண்ணுக்குக் குளுமையாய் எழில் கொழித்து மனதைக் கவரும் காலம் ஒன்றுமிருக்கிறது என்பது வெளியூர்காரர்கள் அன்றெல்லாம்நேரில் பார்த்தும் அநுபவித்தும் அறிந்த உண்மை.

—(நெடுங்காலம் வெளியூர் வாசியாகவிருந்து அண்மையில் தாய்நாட்டுக்கு வந்துபோன ஒருவர் சிலகாலம் இங்கு தங்கிய அநுபவம் பற்றி தமது யாழ்ப்பாண நண்பருக்கு எழுதிய கடிதத்தில் ஒரு பகுதி.)

—தொகுப்பு: ஈ. கே. ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் தொடர்கதை

# கீதா விலாஸ்

— கு ராதா ரமணன்

(3)

ரமேஷ் கீதாவிலாசுக்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. முனியாண்டித் தாத்தா மட்டும் ஒருமுறை வந்து பார்த்துவிட்டுப் போனார். முதலாளி ஒரு கடிதம்கூட எழுதவில்லை.

கீதாவிலாஸோ அவனுக்கு ஒரே மர்மமாக இருந்தது. அங்கு வருபவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் கோணமாக இருந்தார்கள். அடசீ! அந்தப் பாழ் மண்டபத்தில் தான் இரவு விருந்தாளிகள் அதிகம் என்றால் இங்கும் அப்படித்தானா இருக்கவேண்டும்? கீதாவிலாஸ் ஜன நடமாட்டம் இல்லாத ஒரு பகுதியிலே தான் இருந்தது.

மாளிகைக்கு முன்னால் கொந்தளிக்கும் கடல். எதிர்த்திசையில் அமைதி பொங்கும்கிறிஸ்தவ தேவாலயம்!

ஒருநாள் மாலை ஐந்து மணியிருக்கும் 'விலாஸில்' ஒருவருமே இல்லை. எப்படியாவது அந்த ஆலயத்தைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையில் ரமேஷ் உள்ளே சென்றான்.

''உள்ளே வா தம்பி! யாரப்பா நீ?''

வயது முதிர்ந்த கிறிஸ்தவ பாரதியார் அவனை வரவேற்றார். தூய்மையான வெள்ளை அங்கி. பஞ்சடைந்த கேசங்கள். நீண்டு வளர்ந்ததாடி! முகத்திலே சாந்தம் வீசும் புன்னகை. இவை எல்லாவற்றையும் பார்க்கும்போது ரமேஷை அறியாமலேயே அவனின் உள்ளத்தில் ஏதோ அமைதியேற்படுகிறது.

''ஆண்டவனை ஜபிப்பதற்கா வந்திருக்கிறாய்?''

''இல்லைச்சுவாமி!''

''ஏதாவது பொருள் வேண்டுமா?''

''இந்த ஆலயத்தைப் பார்க்கவேண்டுமென ஆசையாக இருந்தது!''

''நீ கிறிஸ்தவன் இல்லையா?''

''இல்லை, நான் ஒரு இந்து!''

''ரொம்ப நல்லது! உனது இருப்பிடம்?''

''கீதா விலாஸ்!''

''கீதாவிலாஸா?''

இப்பெயரைக் கேட்டதும் பாதிரியாரின் முகம் சற்றுச் சுருங்கியது.

''ஏன் சுவாமி? கீதாவிலாஸில் இருக்காகூடாதா?''

இதற்கவர் எவ்வித பதிலும் கூறவில்லை. அமைதி.

''சுவாமி நீங்கள் மட்டும் தானா இங்கு இருக்கிறீர்கள்?''

''இல்லை!''

''வேறுயார் உங்களுக்குத் துணை?''

''உலக மக்களுக்கெல்லாம் துணையாக இருக்கும் யேசு பிரான் இருக்கிறாரே! அது சரி, நீ ஏதாவது சாப்பிட்டாயா?''

''மத்தியானம் உணவருந்தினேன்!''

மாலையில் ஒன்றும்சாப்பிடவில்லையா?''

''இல்லை.''

பாதிரியார்எழுந்துஉள்ளே செல்கிறார். திரும்பி வரும்போது அவரின் கையில் சில வாழைப்பழங்கள் இருக்கின்றன. பழங்களை அவனின் கரங்களில் வைத்துக் கொண்டே பாதிரியார்பேசினார்.

''தம்பி! நீ ஒருபோதும் கீதாவிலாஸில் இருக்கக் கூடாது!

''அது பாவிகள்கூடும் நரக மண்டபம். கள்ளக்கடத்தற் காரர்களும் கறுப்பு மார்க்கெட் வியாபாரிகளும் தான் அங்கு வருவார்கள். வஞ்சகமற்ற பாலகனாகிய நீ எதற்காக அங்குவாழவேண்டும்?''

''சுவாமி, மெதுவாகப் பேசுங்கள். யாருக்காவது கேட்டுவிடப்போகிறது.''

## சிறுவர் பூங்கா



''தம்பி! கொடுமையை எதிர்ப்பதற்கு ஒருநாளும் அஞ்சாதே! நீதிக்குப் பயப்பிடு. அநீதியாலும் கெட்டவனாலும் இவ்வுலகத்தில் ஒன்றுமே செய்ய முடியாது! உண்மையாக நடந்தால் இறைவன் என்றுமே உன்பக்கம் நிற்பார்.''

ஏதோ போதிப்பவர்போல் கூறிவிட்டு கிறிஸ்தவ பாதிரியார் உள்ளே போய்விட்டார்- அன்றிரவு பூராவுமே அவனுள்ளம் அமைதி இன்றி சஞ்சலப்பட்டது.

நாளை மறுநாள்...

மற்றவர்களைப்போல் ரமேஷும் ஒரு சாதாரண கொள்ளைக்காரன். இனி அவன் வீதிகளில் பயமின்றி நடமாடமுடியாது. பொலிஸார் எந்நேரமும் கண்ணி வைத்துக்கொண்டே இருப்பார்கள். ஐயோ என்ன வாழ்க்கை...

முதல்நாள்இரவு முதலாளி கள்ளக்கடத்தலுக்கு உதவுமாறு கேட்டார்- கேட்டார் என்ன, உத்தரவுபோட்டார். ரமேஷ் மறுக்கவில்லை. தன் விருப்பப்படி ஒருபோதும் இயங்கவிடமாட்டார்கள் என அவனுக்கு நன்கு தெரியும். எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் சம்மதம் தெரிவித்தான்...

இரவு மணி ஒன்று.

துறையின் தெற்கு மூலையில் இருந்து அந்தப் படகு புறப்படுவதற்குத் தயாராகிக்கொண்டிருந்தது. ரமேஷ் படகின் முன்புறத்தில் சாய்ந்துகொண்டான்.

படகில் இருந்தவர்கள் எல்லோருமே புதுமுகங்கள் தான். கடத்தல் அவர்களின் தினசரித் தொழில்போலும். குள்ளமான ஒருவன் சிரித்துக்கொண்டே துப்பாக்கியினுள் தோட்டாக்களைத் தள்ளிக் கொண்டிருந்தான்.

''அண்ணே, இந்தத்துப்பாக்கிக்கு இன்றைக்கு எவன் பலியாகப் பாகிறானோ?''- குரலில் இருந்து, பேசுபவன் ஓர் இந்தியன் எனத் தெரிகிறது.

''இந்தப் பையனாகத்தான் இருக்கும்''- சிரித்துக் கொண்டே ரமேஷைக் காட்டுகிறான் ஓர் ஆறடி மனிதன்.

''ஏ பையா! நீ ஒழுங்காக நடக்கல்லே, உன்னைச்சுட்டுப் போடுவம்!''

''நான் ஒழுங்காகத்தானே நடப்பேன்!''

''அட பையன் சுட்டியாக இருக்கிறானே.''

அதன் பின்னர் ஒரே அமைதி! ரமேஷின் நெஞ்சத்தில் மட்டும் ஒரு கடத்தல் காரனுக்குரிய வைராக்கியம் சிறிது சிறிதாக ஏறிக் கொண்டே இருந்தது! நேரம் இரண்டு மணியைக்கடந்திருக்கும். பரந்து விரிந்த ஆழ் கடலில் அவர்களின் பிரயாணம் தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. பொதுவாக எல்லோருமே சற்றுப் பரபரப்புடன்தான் காணப்படுகிறார்கள். ரமேஷ் மட்டும் எவ்வித சலனமும் இல்லாமல் இருந்தான்.

விநாடிக்கு விநாடி வேகத்தை அதிகரித்துக் கொண்டிருந்தபடகு திடீரென நின்றது. இயந்திரத்திலே ஏதோ கோளாறும்! அவசர அவசரமாகத் திருத்திக் கொண்டிருந்தார்கள்! அரைமணி நேரம் கடந்திருக்கும், திடீரென அந்த ஆறடிமனிதன் கத்தினான்.

''அண்ணே! நேவிக்காரர் வருகிறார்கள்!''

''ஐயையோ, தங்கம் நாலு லட்சத்திற்கு இருக்கிறதே!''

''பிடிபட்டால் பனிரண்டு லட்சமல்லவா குற்றம்!''

''இனி ஒன்றும் செய்ய இயலாது! தங்கத்தைக் கடலுக்குள்எறிந்துவிட்டுஎல்லாரும் குதியுங்கள்.''

குள்ளனின் கட்டளையைத் தொடர்ந்து தங்கம் கடலுக்குள்ளே எறியப்படுகிறது! அதை அடுத்து ஒவ்வொருவராக நீருக்குள் குதிக்கிறார்கள்.

''அடபயலே நீ குதிக்கவில்லையா?''- எஞ்சியிருந்த இருவரிலே குள்ளமானவன் ரமேஷைப் பார்த்துக் கேட்கிறான். அவனுக்குத்தான் நீந்தத்தெரியாதே! எப்படிக் கடலுக்குள் குதிப்பது?

''பயலுக்கு நீந்தத் தெரியாதோ?''

''அப்படியென்றால் என்ன செய்வது?''

''ஆளைக்கொன்றுவிட்டு கடலுக்குள்ளே தூக்கி எறியவேணும்.''

ரமேஷுக்குப் பகீர் என்றது. நீரினுள் குதிப்பதற்கு மறுத்தால் இவர்கள் தன் உயிரை வாங்கிவிடுவார்கள் என்பதில் அவனுக்கு எந்தவித சந்தேகமுமேயில்லை!

''என்ன ஸேர்! அப்படிச் சொல்லுகிறீர்கள்? நான்தான் நல்லாக நீந்துவேனே!''

''அப்படியென்றால் கடலுக்குள் குதி.''

தன் இஷ்டதெய்வம் முருகனை வேண்டிக்கொண்டே ரமேஷ் கடலுக்குள் குதிக்கிறான்.

அவனின் உடல் சிறிது சிறிதாகக் கீழேபோய்க் கொண்டிருக்கிறது...

(தொடரும்)

# பிள்ளையெனும் செல்வம்

— பெரி. சண்முகநாதன் —

இல்லையெனும் குறையே காணார்
எவருளார் சொல்வேன் கேளீர்!
பிள்ளையெனும் செல்வம் பெற்றார்
பேறெலாம் பெற்றார் அன்றோ!
கிள்ளைபோல் மழலை கேட்பார்
கேட்கவே றிசையும் உண்டோ?
முல்லைநேர் சிரிப்பில் அந்த
முழுமுதற் பொருளே காண்பர்.

ஆம்பற்பூ விழிகள் ஒற்றி
அனிச்சம்பூ மேனி புல்லி
மாம்பழக் கன்னந் தொட்டு
மாதுளை யிதழைப் பிட்டுத்
தீம்பலாச் சுளையை விஞ்சத்
தித்திக்கும் முத்தம் பெற்றார்
மேம்படு அமுதே உண்டார்
மேலினிப் பெறுவதுண்டோ?

பனிமலர் தலையில் சூடிப்
பால்மதி வதனம் காட்டி
மணிமலர்ச் சிறுகை நீட்டி
மானெனத் துள்ளி வந்து
கனிவொடு மடியில் குந்திக்
கண்மணி மார்பில் சாய்ந்தால்
புனிதமாய் மெய்யில் பொங்கும்
புத்துணர் வெதிலே உண்டோ?

அன்னத்தைப் பாலில் இட்டே
அன்னைதான் ஊட்டும் போது
கிண்ணத்தைக் கையில் பற்றிக்
கீழ்மேலாய் இறைக்கும் பிள்ளை
வண்ணத்து நிலவைக் கூவி
'வா'வென அழைக்கும் காட்சி
விண்ணுளார் தாமும் காண
விழைவதோர் இன்பம் அன்றோ!

மன்னராய்ப் பிறந்திட்டாலும்
மாநிலம் ஆண்டிட் டாலும்
பின்னர்தம் பெயரைச் சொல்லும்
பிள்ளையைப் பெற்றிடாதார்
என்னருஞ் செல்வம் பெற்றும்
எய்துவ தென்கொல் அம்ம?
பன்னருஞ் செல்வத்துள்ளும்
குழந்தையே பயனார் செல்வம்!

# இரத்தத்தின் வகைகள்

— செல்வி சொர்ணராணி சண்முகம் —

மனித இரத்தம் ஐந்து வகைப்படும். அவையாவன: 'A' பிரிவு, 'B' பிரிவு, 'O' பிரிவு, 'AB' பிரிவு, 'Rh' பிரிவு என்பன. இவற்றில் 'Rh' பிரிவு, A, B, O, AB பிரிவுகளைவிடவேறுபட்டது.

ஒரு மனிதனுக்கு இரத்தம் ஏற்றும்போது இரத்தத்தின் பிரிவுகளைப்பற்றித் தெரிந்தெடுக்கவேண்டியது அவசியம், இலங்கையிலே 'O' பிரிவு 46%ம். 'A' பிரிவு 42%ம், 'B' பிரிவு 9%ம், 'AB' பிரிவு 3%ம் உள்ளன. இரத்தம் ஏற்ற முன்பு கொடுக்கும் இரத்தத்தின் வகையும் ஏற்றப்படும் இரத்தத்தின் வகையும் அவசியம் அறிந்திருத்தல் வேண்டும். 'A' பிரிவு இரத்தம் உள்ள மனிதருக்கு 'A' பிரிவு இரத்தம் கொடுக்கப்படல் வேண்டும். ஆனால் 'O' பிரிவு இரத்தம், எல்லாவகை இரத்தம் உள்ளவர்களுக்கும் கொடுக்கலாம். இவ் 'O' பிரிவை எல்லாருக்கும் கொடுக்கப்படும் இரத்தம் என்று சொல்வர். அதேபோல் 'AB' பிரிவு இரத்தம் உள்ள மனிதருக்கு எந்தவகைஇரத்தமும் கொடுக்கலாம். இப்பிரிவை 'மற்றைய பிரிவுகளை ஏற்றுக்கொள்ளும் இரத்தம்' என்று சொல்வர். இரத்தத்தின் பிரிவுகளை மாற்றிக் கொடுத்தால் இரத்தம் கட்டிபட்டு உயிர்ச்சேதமும் ஏற்படலாம். இப்பிரிவுகளைக் கண்டுபிடிக்க வைத்தியசாலைகளில் பரிசோதனைகள் செய்வார்கள்.

'Rh' வகையில் இரு பிரிவுகள் உண்டு. அவையாவன: Rh +) பிரிவும், Rh (—) பிரிவுமாம். இலங்கையில் Rh (+) பிரிவு 95%மும், Rh (—) பிரிவு 5%ம் உண்டு. Rh (+) பிரிவு உள்ள மனிதனுக்கு Rh(—) பிரிவு இரத்தம் ஏற்றப்பட்டால் பல ஆபத்துக்கள் ஏற்படும். ஆகவே இரத்தத்தின் வகைகளைப்பற்றி நாம் அனைவரும் அறிந்திருத்தல் அவசியம்.

---

சாதிகள் என்று ஒன்றில்லை. நீதியும் உயர்ந்த பண்பும் கல்வியும் அன்பும் நிறைய உடையவர்களே மேலோர். மற்றப்படி தாழ்வு-உயர்வு கூறுதல் பாபமாகும்.

— பாரதி.


"லைடன்" LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்கள்
- ஸ்போட் சேட்டுகள்
- ரீ சேட்டுகள்
- கால்மேசுகள் (Nylon & Cotton)

லைடன் இன்டஸ்றீஸ் லிமிடெட்

7, ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.



ராக்ரர்களுக்கு ..

ராக்ரர் உறுப்புகளுக்கு ...

இன்னும்

ராக்ரர் றிப்பயர்களுக்கு

ராஜா கோப்பரேஷன்

பரந்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை நாடகம்

**சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வார**

## சிறுகதை, கவிதைப் போட்டி

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரத்தை யொட்டி 'ஈழநாடு' தினசரி நடத்திய சிறுகதை, கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற கதையும், கவிதையும், பாராட்டுக்குரிய கதைகளும் கவிதைகளும் 'ஈழநாடு' ஞாயிறு வாரப்பதிப்பில்

**31—10—65 முதல் வெளிவரும்.**

---

**அநேகமாய் ஓராண்டுக்கு முன் 'ஈழநாடு' ஞாயிறு கதைமலரில் 'உள்ளுணர்வு' என்ற த[?]ப்புடன் இச் சிறுகதை வெளிவந்தது. எஸ். அகஸ்தியர் எழுதிய இக்கதை மறுபடி 25-10-64 ல் இலங்கை வானொலியில் நாடகமாக்கப்பட்டு ஒலிபரப்பாயிற்று. கதை வடிவில் 'உள்ளுணர்வை'ச் சுவைத்த வாசகர்கள் அதன் வானொலி நாடக அமைப்பையும் பெரிதும் சுவைப்பார்கள் எனக் கருதி இங்கு அதனைத் தருகிறோம்.**

---

### பாத்திரங்கள்

சின்னத்துரை
தங்கமலர்
இவர்களின் பெத்தாச்சி
பாலசிங்கம்
கந்தசாமி

சின்னத்துரை: (காவோலை வெட்டும் கிழவியிடம்) பெத்தாச்சி, பெத்தாச்சி, இஞ்ச பார், அம்மான் தந்த காசை. ஆரவோ ஊரவங்கள் வந்து சறுக்கீசு காட்டுறுங்களாம். நான் போய் பாத்திட்டு வரட்டே? அம்மானும் தன்னுடைய மகள் தங்கமலரக் காவோடை பாக்கப்போருராம்.

கிழவி: சின்னத்துரை என்ன சறுக்கீசோ? அதுவும் ஒரு கண்டறியாத திறுக்கீசுதான். அதிருக்க, அம்மான் எண்டு ஆரைச்சொல்ருய்...? அவனையோ...? நல்ல அம்மானும் ஆட்டுக்குட்டியும்தான்... ம்... நீ ஏன் அவனிட்டைக் கைநீட்டிக் காசு வேண்டினனி...? அவனிட்டையிருந்து இனிமேல் ஒரு சுண்ணும்புக் கட்டியும் எங்களுக்குச் சுவறத்தேவையில்லை.

சின்: என்ன பெத்தாச்சி அப்பிடிச்சொல்ருய்..? அவர் அம்மானையும் என்னுடைய ஆச்சியையும் நீதானே பெத்தனி...? அப்ப அவை எங்களுக்கு என்ன பிறத்தியே.

கிழ: ம்... ஆர் பிறத்தி, அப்பன் பிறத்தி கதவு சாத்திறல் நிலை பிறத்தி எண்ட மாதிரி, இப்ப அவன் எங்களைப் பிறத்தியாக்கித்தானே போட்டான்..? உனக்கு இதெல்லாம் தெரியாது. (பெருமூச்சுடன்) முதலில் போய்வேண்டின காசைக் குடுத்திட் வா...

சின்: என்னெண்டு பிறத்தி பெத்தாச்சி...

கிழவி: பின்னை என்ன...? நீ பிறந்து கொஞ்சநாளாலை நீ அப்பனைத் திண்டிட்டாய். நீ பிறந்த நேரகாலம், நான் பெத்த ராசாத்தி உன்னுடைய ஆச்சி அது வாண்டுண்டு நீரோசையாய்ச்சீவிக்கிற நேரத்திலை (விம்மிய வண்ணம்) கண்கெடுவான், முருங்கைமரத்தை முறிச்ச மாதிரி முறிச்சுப்போட்டான்.

சின்: ஆர், அம்மானே...?

கிழ: இல்லைச் சின்னத்துரை, அந்தக் கண்கெட்ட கடவுள்தான்... அவ தான் கண்ணை மூடமுந்தி சொம்மானிட்ட ஒப்படைச்சிட்டுப் போட்டா... ஆனல், அவன் பெத்த தாயெண்டு என்னை எட்டியும் பாக்கேல்லை. அவ இவனை நம்பிச் செத்தா. இவன் அவவுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துபோட்டான்... இப்ப... அவை அவை பாடு. இனிமேல் நாங்கள் உண்டு... எங்கடை பாடு உண்டு. நீ இனிமேல் பட்டு அவையினுடைய பிச்சைக் காசுக்குக் கை கீய் நீட்டாதை, என்ன..?

சின்: வாக்கைக் காப்பாத்தேல்லையெண்டுசொல்ருய்... அதென்ன, அதை எனக்கு விருத்துறையாச் சொன்னுத் தானே நான் அவரிட்டைக் கேக்கலாம்..?

கிழ: இதெல்லாம் கேக்கிற சங்கதியில்லைச் சின்னத் துரை... இது எப்பவோ முடிஞ்சவிஷயம். உனக்குத் தேவையில்லை. நீபோய் ந்தக் காசைக் குடுத்திட்டு வந்து உறியில கிடக்கிற புட்டை எடுத்துப் பழங்கறியோடை குழைச்சுச் சாப்பிடு, போ...

சின்: அப்ப இண்டைக்குச் சறுக்கீசு பாக்கிறதுக்குக் காசு...

கிழ: முதலிலை காசைக் கொண்டுபோய் குடுத்திட்டு நான் சொல்றத்தைக் கேள்.

சின்: (போய்க்கொண்டே) கேக்கிறன். என்னுடைய பெத்தாச்சியல்லே எல்லா பொடியங்களும் சறுக்கீஸ் பாக்கப் போருங்கள். நானும் போய்ப் பாக்கப் போறன்... தாறனெண்டு சொன்னுத்தான் நான் கொண்டுபோய்க் குடுத்திட்டு வருவன்...

கிழ: நான் தாறன் குடுத்திட்டு வா... தம்பி சின்னத் துரை...

சின்: (தூரத்திலிருந்து) போகவிட்டுட்டுப் புறத்தால கூப்பிடுறியே?

கிழ: ஒண்டுமில்லை... வாற கையோட, அவள் சின்னம்மாவிட்டப் போய் பெத்தாச்சி இந்த மாதச் சீட்டுக் காசை வாங்கிவரச் சொன்னவெண்டு கேட்டு வாங்கிவா... என்ன.

சின்: ஓம் வாங்கிவாறன்...

## (2)

தங்கமலர்: (கவிதை ஒன்றை ராகத்துடன் முணுமுணுத்தபடி) ம் ம் சிங்களத் தீவினிற்கோர் பாலமமைப்போம்...

பாலசிங்கம்: (சிரிப்புடன் கையைத் தட்டிக்கொண்டே) சபாஷ் என்ன மலர், பாரதியே வந்தாப் போல இருக்கே...?

த. ம: ஓ.. பாலசிங்கம்.. நீங்களா...? ஏன், பாரதி தான் வரவேணுமோ... நீங்களும் தான் பாரதியைப் பற்றி அண்டைக்குக் கண்கடை தெரியாமல் வெளுத்துக் கட்டினீர்களே?

பால: அடடே, மலர் நீ உண்மையிலை இப்பிடி ரசிகை எண்டு அறிந்திருந்தால், பாரதியை மட்டுமென்ன வள்ளுவன் இளங்கோவையும் கொண்டுவந்து உனக்கு முன்னலை விட்டிருப்பன்...

த. ம: (சிரித்துக்கொண்டு) நல்லகாலம்... கம்பனையும் காளிதாசனையும் விட்டுவச்சிட்டீங்கள்... அந்த அளவுக்கு அவை புண்ணியம் செய்தவைதான்...

பால: மலர்... நீ காளிதாசனை ஞாபகப்படுத்திற போதுதான், உண்மையிலையே அவன் எழுதிய சாகுந்தலம் எண்ட அந்த அழியாத காவியம் என்னுடைய மனசைக்குடையுது...

த. ம: ஏன் பாலசிங்கம்... துர்ஷ்யந்தனுக எண்ணமாக்கும்..?

பால: மலர், துர்ஷ்யந்தன் என்னதான் சகுந்தலையை மறந்திருந்தாலும் அவளைவிட வேறே எந்தப் பெண்ணையாவது மனசால் கூட நினையாதவன். அந்த அளவிலை

த. ம: (இடைமறித்து) அவனைப்போல உங்களை நீங்கள் கற்பனைபண்ணிக் கொள்ளுகிறீர்களாக்கும்.

பால: அப்படித்தான் மலர். நீ

த. ம: நான் சகுந்தலை. நீங்கள்..?

பால: நிச்சயமாக... கேவலம், ஒரு மோதிரத்தை மாத்திரம் கண்டபிறகு பழைய நினைவு ஓடிவந்து கொள்ளுமட்டும் துர்ப்பாக்கியசாலியாக இருக்கமாட்டன்.

த. ம: நானும் அப்பிடித்தான்...

பால: என்ன..?

த. ம: பின்னை என்ன பாலசிங்கம், கொண்ட காதலை மறந்த பிறகு காதல் பிச்சை கேட்டுத் திரியிறதெண்டால் பெண்கள் என்ன அடிமைகளோ...

பால: மலர்... பெண்கள் அடிமைகள் எண்டு ஆர் இப்ப சொன்னது...? ஆனல் காதல்.

த. ம: அ... அது சரி... ஐயா வாற நேரமாச்சு...

பால: என்ன மலர், வீட்டிலை இருக்க ஏதோ டல்லாயிருக்கெண்டு உன்னோடை கொஞ்ச நேரம் சும்மா பேசிக் கொண்டிருக்கலாமெண்டு வந்தால்...

த. ம: வந்தீங்கள்... அப்ப ஒரு கப் கோப்பி சூடாகப் போட்டுத்தாறன். என்ன... குடிக்கிறீங்களா?

பால: ஓ... பேஷ் இதைக்கூட வேண்டாமெண்டு சொல்லுவாங்களா...? ஒரு கப் கோப்பி உள்ளே போனல் எழுத்தாளங்களெல்லாம் ஒரு சிறுகதை எழுதி முடித்திடுவாங்கள்... மலர். இது தெரியுமா...

த. ம: (சிரித்துக்கொண்டு) கோப்பியா? நல்ல கதைதான்... போங்கோ... கோப்பிக்கும் டீக்கும் சிந்தனை ஓடுற காலம் போட்டுது... அது தெரியாதோ உங்களுக்கு...?

பால: மலர்.. நீ ஆள் சரியான யதார்த்தவாதிதான்...

த. ம: கொஞ்சம் பொறுங்கோ... (போய்க்கொண்டு) கோப்பி போட்டுக்கொண்டு வாறன்...

பால: மலர் அமுசடக்கமாய் இருந்தாலும் ஆள்வலு புலிதான். ம்.. இந்தநாளைய எழுத்தாளர்களை யெல்லாம் தெரிஞ்சு வைச்சிருக்குதே...

த. ம: (வந்துகொண்டே) என்ன தனிய இருந்து ஏதோ புலம்பிறீங்கள்..? சரி சரி இதைக்குடிச்சிட்டு... அதுக்குப்பிறகுபேசுங்கோ...

பால: மலர்.. இது என்ன கோப்பியே...?

த. ம: நல்லாச் சுவைச்சுக் குடிச்சுப் பாருங்கோ, அப்ப தெரியும்...

பால: சுவைச்சுக் குடிச்சதாலைதான் கேக்கிறன்... உண்மையிலை இதுக்குக் கோப்பித்தூள்தான் போட்டதோ அல்லது பொரிமாத்தூள்...?

த. ம: ஐயையோ... தெரியாமல் போட்டிட்டன் போல.

பால: மலர்... இதுகோப்பி அல்ல அமிர்தம்... (பெருமூச்சுடன்) ஆனல்... (சீழ்க்கை அடிக்கும் சப்தம்)

பால: மலர் அதாருது...? சின்னத்துரைபோலஇருக்கு.

த. ம: அவர்தான். கூப்பிடுங்கோ... (சிரித்துக்கொண்டு) ஆள்தானும் தன்பாடுமாய்த் திரியிறதுதான் வேலை.

பால: சின்னத்துரை...

சின்: (வந்து கொண்டே) ஏன், என்ன சங்கதி...? என்னத்துக்குக் கூப்பிட்டனிங்கள்..?

பால: வா வா... கும்பிடப் போன தெய்வம் குறுக்க வந்தமாதிரி, உன்னை நாங்கள் தேட நீயே வந்திட்டாய். இஞ்சவா இப்பிடி...

சின்: அ... வந்திட்டன்...

பால: சோக்கல்லோ அ... நல்ல பிள்ளையல்லோ, ஓடிப் போய் ஒரு பைக்கற் சிகரட் வாங்கிவா பாப்பம்... அ... இந்தா காசு...

சின்: ஒரு பெட்டியோ அல்லது ஒரு சிகறேற்றுே...

பால: அதுதான் காசு தாறப்போ ஒருபக்கற்எண்டு சொன்னேன். ஞாபகமில்லையோ...

சின்: அப்ப, ஒரு பக்கேற்றும், ஒரு சிகறேற்றுமே வாங்கிவாறது...?

த. ம: நீங்கள்அதைவிளக்கமாகச் சொல்லிவிடுங்கோவன்... பைக்கற் பைக்கற் எண்டால் அவருக்கு விளங்குமே...?

பால: எடடே... அப்படியே சங்கதி... சின்னத்துரை நான்தான் பிழை விட்டிட்டன்... நீ போய், ஒரு பெட்டி சிகறற் தாருங்கோ எண்டு கேட்டால் கடையிலை தருவினம். நெடுக நெடுக வேண்டித் தாறனி அதுக்குள்ள மறந்திட்டியே....?

சின்: (போய்க்கொண்டே) இதில் காசு மிஞ்சினு நான் தோடம்பழ இனிப்பு வேண்டித் தின்னுவன். மிச்சக் காசு தரமாட்டன்... என்ன, சரியோ...?

பால: ஓ... ஓ... தாராளமாய் வாங்கிச் சாப்பிடு... மிஞ்சினு எனக்கும் கொஞ்சம் கொண்டு வந்து தாறியே...?

சின்: தாறன் (போய்க் கொண்டு) அவவுக்கும் தாறதோ..?

த. ம: எனக்கு வேண்டாம்...

பால: மலர்.. ஆள் புழுகிக் கொண்டுதான் போருர். ஆனல் கணக்காய்த்தான் காசு குடுத்தனுன்...

த. ம:(சலிப்புடன்) ஐயோ நீங்கள் சரியான ஆள்தான். பாவம் அது பச்சைக் குழந்தைப் பிள்ளைமாதிரி வஞ்சகமில்லாமல் சொன்னவுடனே இந்த வெய்யிலுக்குள்ளே ஓடிப்போகுது. அவருக்கு மூளை இல்லையெண்டதுக்காக இப்படி வஞ்சகம் செய்யிறது பாவம். எனக்கு இது பிடிக்காத ஒரு வேலை...

பால: பாவமாவது புண்ணியமாவது... மலர், உனக்குத்தான் பாவ புண்ணியந்தில நம்பிக்கையில்லையே, அப்ப ஏன் இப்படி நொந்து கொள்ளுகிருய்..

த. ம: அதிலநம்பிக்கையில்லாதபடியால்தான் மனுசத்தனம் இருக்கவேணும் எண்டு சொல்ல வந்தனுன். ஏனெண்டால் இந்தக்காலத்திலை படியாத பாமரச் சனங்களிலும் பார்க்க, படிச்சவைக்குத்தான் அதிகமாகப் புத்தி சொல்ல வேண்டியிருக்குது...

பால: அம்மா புண்ணிவதி.. நீ சொன்ன மனிதாபிமானத்தைக் கொஞ்சம் சொல்லித்தா.. அ உன்... பக்தன் அதை ஏற்றுக் கொள்கிறேன்.

தங்: (சிரித்துக்கொண்டு) அப்பிடியா இந்தா ஏற்றுக் கொள்ளுங்கள்.

(இருவரும் கலகலத்துச் சிரித்துக்கொண்டு ஏகுதல்)

## (3)

கிழவி: இப்பஇங்கைநிண்ட இந்தப் பொடியைக் காணேல்லை... அ... எங்கை போயிருப்பான்...

சின்: (சிணுங்கி அழுதபடி வந்துகொண்டு) [?]பெத்தாச்சி... (விக்கி விக்கி) அந்தச் சிவக்கொழுந்து கடையிலை அவயின்ர மகன் செல்லக்கண்டன் எனக்குக் கன்னத்தைப்பொத்தி அடிச்சுப் போட்டான் பெத்தாச்சி...

(8-ம் பக்கம் பார்க்க)

வெங்காயம், தக்காளி, மிளகாய், கத்தரி, கோவா முதலிய பயிர்களுள் உண்டாகும் களைப்புல்லை அழிப்பதற்கு
புதிய மருந்து
டெக்தால்
DACTHAL
Agents :
PHONE: 397 ROYAL DISPENSARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழ: ஆர் அடிச்சவன்... ஏன் அடிச்சவன்..? அ நீ... இஞ்ச வாடி அப்பு...

சின்: இஞ்சேர் பெத்தாச்சி... கன்னத்தைப் பிடிச்சு பளார் என்டு அடிச்சுப்போட்டான்.

கிழ: நீ ஒண்டும் செய்யேலேயே...?

சின்: அ... நல்லாவிட்டன். நானும் ஒரு கல்லெடுத்து அவனுடைய முதுகு கிழிய எறிஞ்சுபோட்டுத்தான் ஓடி வந்தனான்.

கிழ: ம்... அது தானே கேட்டனான்.... (பெருமூச்சுடன்) அதிருக்க... ஏன் சின்னத்துரை வீணாய் அங்கை இங்கை திரிஞ்சு சண்டை சள்ளுப்பிடிக்கிறாய்..? உம்... உள்ளதைச் சொல்லு... அங்கை என்ன நடந்தது...?

சின்: ம்...ம்... அவன் ஒரு புது வேட்டி உடுத்துக் கொண்டு அதைக் காட்டிக் காட்டிப் பெரிய செட்டுவிட்டான். நான் எனக்கும் எங்கடை பெத்தாச்சி உப்பிடிக் கனவேட்டி வாங்கித் தந்தவ என்று சொல்ல, அவன், என்னைப் பழிச்சுப் போட்டு நாங்கள் பணக்காறர், உங்கட பெத்தாச்சிக்கு எங்கால காசு...? அவ சரியான முட்டுப்பட்ட கிழவி. புதுசுவேண்டித் தாறதெண்டால் அவ களவுதான் எடுக்கவேணும் எண்டு சொல்லி உன்னையும் பேசினான் பெத்தாச்சி...

கிழ: சொன்னா சொல்லிப் போட்டு இருக்கட்டன். எங்களுக்கென்ன தோலுக்கையே பூரப்போகுது...? அவை பணக்காறர் எண்டால் அவைசோத்தைச்சாப்பிடட்டும். நாங்கள் கூழைக் குடிப்பம்...

சின்: அதுக்கில்லைப் பெத்தாச்சி. நான் மொக்கன் எண்டபடியால் தான், எங்கடைஆச்சி எனக்கும் தங்கமலரக்காவுக்கும் போட்ட சாணக்கூறையை அம்மான் கிழிச்சுப்போட்டாரெண்டு, என்னையும் மொக்கன் எண்டுபேசினான். அதுதான்...

கிழ: அதுக்கு அவைக்கு என்ன நட்டமாமே...? ம்...? கண்டறியாத சாணக்கூறைதான். அண்ணன் வாக்குத் தவறமாட்டான் எண்டு அவ... தான் போட்டு வச்சிட்டுக் கண்ணைமூடியிட்டா கடவுளே... இப்ப அது கண்டது கடியதுகளின்ர வாய்க்குப் பகுடியாப் போச்சுதே...

சின்: அதென்னெ சாணக்கூறை...?

கிழ: என்ரை அப்பு அதையேன் உனக்கிப்ப...

சின்: சொன்னால் தான் சோறு சாப்பிடுவன்...ம்..

கிழ: அதுதான் உன்னுடைய ஆச்சியும் அம்மானும் சேர்ந்து, நீயும் தங்கமலரும் குழந்தையளாயிருக்கிறப்போ உங்கரண்டுபேருக்கும்சடங்கு செய்து வைக்கிறதுஎண்டு பேச்சுக்கால் வைச்சவை...

சின்: ஆருக்கு... எனக்கும் தங்கமலரக்காவுக்குமோ...?

கிழ: ம்... அக்காதான் அக்கா. அவை செய்த செய்கைக்கு நீஇப்ப உன்ர மச்சாளையும் அக்காவெண்டுதான் சொல்றகாலமாப்போச்சுது. என்ன செய்றது... எல்லாம் இந்தக் காலத்தின்ர கோலம்...

சின்: பிறகு என்ன நடந்தது பெத்தாச்சி...

என்ன நடக்கிறது...? பணம் வந்து பிடிபட்ட கொழுப்பிலே எல்லாம் மாறிப்போச்சுது... உன்னுடைய ஆச்சியும் கண்ணை மூடிவிட்டாள். (அழுகையுடன்) இப்ப கடவுள் என்னை வைச்சுச் சோதிக்கிறான்.

சின்: அதுக்கு நீ ஏன் அழுகிறாய்...? நான் அப்பிடியெண்டால் அவவைச் சடங்கு முடிக்கிறன். நீ அழாதை பெத்தாச்சி.,

கிழ: ஐயோ என்ர வஞ்சகமில்லாத குஞ்சு! நீ உன்னுடைய வாயாலையே இப்பிடிச் சொல்றாய்... (அழுது கொண்டு) அ... அவைதான் உன்னைக் கைவிட்டிட்டினமே... என்ர அப்பு உனக்கு ஒண்டும் தெரியேல்லை... ராசா... (மூக்கைச்சீறிக்கொண்டு) கடவுளே, என்ர அப்பன்ர கோலத்தைப் பார் அப்பனே...

சின்: பெத்தாச்சி அதுக்கு ஏன் நீ இப்படி எல்லாம் நெடுக கண்டசீருக்கு அழுகிறாய்...

கிழ: நான் அழேல்ல.. நீ இஞ்சை வாடி அப்பு... நீ இனிமேல் அங்கை இங்கை எண்டு ஓடித்திரியாதை. கண்ட நிண்டவங்களோடை கூடித்திரியாதை. வீட்டு வேலையைப் பார்த்துக் கொண்டு இஞ்சை பிராக்காய்இரு சின்னத்துரை... என்னராசா...

சின்: ஓ... ஓ.. (போய்க் கொண்டு) ஆனால்... இனி நீ அழுதியெண்டால் நான் உன்ர சொல்லுக்கேளன்.

கிழ: சரி. நான் அழேல்லை... (தனக்குள்) நான் என்ன, காகவோ அழுகிறன்... (போய்க்கொண்டு) எல்லாம் அதுக்காகத்தான்... அதுக்கு ஒண்டும் விளங்குவதில்லையே... நான் என்ன செய்ய...

(4)

கிழ: ம்... பாரன் இந்தப் பொடியனுடைய கெட்டித்தனத்தை. இதிலை காயவிட்டிருக்கிற புளுக்கொடியலை கொஞ்சம் பார்த்துக்கொள். எண்டு சொல்லிப்போட்டு எட்டி உதிலைபோய்த்தண்ணி அள்ளிக்கொண்டு வாறத்துக்கிடையிலை எங்கையோ கம்பம் பாஞ்சுகொண்டு ஓடிவிட்டுதே..ம்.. இந்தப்பொடியன் கொஞ்ச நேரமெண்டாலும் வீடு வாசலோடை இருந்தால்தானே...? எல்லாம் நான் குடுத்தசெல்லம் தான். (கோழிகள் கொக்கரித்து வரும் சப்தம்) இதெங்க

உத்தரவாதத்துடன்

பழைய டயர்களைப் புதுப்பிப்பதற்கும்

திறமான றப்பர் பொருட்களை தொகையாக

பெறுவதற்கும்

மிகச்சிறந்த இடம்.

ஜெனரல் இண்டஸ்றீஸ் லிமிட்.,

அத்தியடி, யாழ்ப்பாணம்

காட்சி அறை:

20, ஸ்ரான்லி வதி போன்: 7024

உங்கள் தேவை! எங்கள் சேவை!

சிறுகதை வாரம் கொண்டாடும் இலங்கை வானொலி நிலையத்தார், தாங்கள் தேர்ந்தெடுத்த கதைகளை நாடகமாக்கியும் ஒலிபரப்புவார்களா? தெரிவுக் கதைகளை தொகுத்து நூல்வடிவில் வெளியிடுவார்களா? அந்தத்தொகுதி பின்பு சாகித்திய மண்டலப் பரிசுக்கு தகுதியுடையதாகுமா? சிறந்த இலங்கை எழுத்தாளர்கள் எழுதினால் அப்படி ஒரு சிறுகதைத் தொகுதியை சிங்களத்தில் மொழிபெயர்ப்பதுடன் உயர் வகுப்புகளுக்கு பாடபுத்தகமாகக் கூட வைக்கலாமே—என்று இப்படியெல்லாம் வாசக நேயர்களிடமிருந்து நமக்குக் கடிதங்கள் வருகின்றன. அன்பார்ந்த நேயர்களே, விபரங்களுக்கு நீங்கள் தவறான இடத்தில் போய் மோதிக்கொள்கிறீர்கள். கண்ணும் காதும் எங்கெங்கோ இருப்பதுபோல 'ஈழநாடு' அச்சாபீஸும் இலங்கை வானொலி நிலையமும் வெவ்வேறு இடத்திலிருந்து வேறு வேறு பணி ஆற்றுகின்றன. உங்களுக்கு ஆக வேண்டியதற்கு இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி, டொரிங்டன் சதுக்கம், கொழும்பு-7 என்ற விலாசத்துக்கு எழுதிப் பார்க்கலாம்

—ஆசிரியர்.

# சிறுகதை நாடகம்

படை எடுத்துக் கொண்டு வருகுதுகள்... சூய்... ஹ்றாய்... இஞ்சை பார் இந்தக் கோழிகளின்ர விளையாட்டை... சின்னத்துரையை நம்பி முத்தத்திலை நெல்லைக்காயவிட்டிருந்தால் இனி இந்தக்கோழிகள் எல்லாம் வந்து முழுதையும் குடிச்சிருக்கும்.., (கோபமாக) எட தம்பி.,. சின்னத்துரை...

ஒரு. பெண்: (தூரத்திலிருந்து) ஆர்,பேரனோ...?

கிழ: ஓம்... பிள்ளை

பெண். குரல்: (தூரத்திலிருந்து)இப்பதான் றோட்டிலை கண்டனான்...

கிழ: ம்... பொடிக்கு விளையாட்டு மெத்திப் போச்சுது... (ஆடு கத்தும் சப்தம்) சூய்...சூய்... ஆ... இந்தக் குறுக்கால போன ஆடு எங்கை இருந்துவந்துதோ.,. இங்கை என்ன இருக்கெண்டு இதுக்குள்ள ஓடிவருகுதுகள்...பணம் பண்டம் உள்ள வையிட்டைப் போங்கோவன்...

பெ. கு: (தூரத்திலிருந்து) ஏணேய்... ஆரோடை... ஆட்டோடையோ பேசிறாய்..(சிரிப்புடன்) நல்லது... நல்லது...

கிழ: ஓ... இந்த நாளையிலை மிருகங்கள்தான் ஆக்களிலும் பார்க்க நல்லதடி பிள்ளை... இந்த மாஞ்சாதி நன்றிகெட்டசாதி...

பெ. கு: ஓமண ஆச்சி... நீ சொல்றதும் பார்க்கப் போனால் ஒரு ஞாயத்துக்குச் சரிதான்.

கிழ: இன்னும் சின்னத்துரையைக் காணேல்லை... இந்தச் சனியன்கள் பேந்தும் வருகிதுகள்... அயலட்டையிலை போய் அவன் சின்னத்துரையைப் போல மேயுங்கோ... போங்கோ தம்பி சின்னத்துரை...

சின்: (தூரத்திலிருந்து) கூய்...

கிழ: அவருக்கு இப்பத்தான் என்ர சத்தம் காதிலை விழுந்திருக்கு...ம்... வேறை எங்க, அங்கதான் போயிருப்பார்... இது வாய்விடாச்சாதிபோல ஒண்டும் தெரியாமல் 'ஆ'வெண்டு பாத்துக்கொண்டிருக்கும். (பெருமூச்சுடன்) ஐயோ அது என்ர மச்சான்தான். வயதும் என்னிலும் பாக்கக் கூடியது... எண்டு அவள் எண்ணிப்பாராமல் விண்ணானம் கொத்துவாள்... இது ஏன் அங்கை நெடுக நெடுக ஓடுது...? வரட்டும் சொல்றன். தம்பி சின்னத்துரை...

சின்: ஓய்... என்ன பெத்தாச்சி...

கிழ: (கோபமாக) ம்... பாரன் அவரை... அவர் அங்கை நிண்டுகொண்டு ஓய் எண்டு குதிரை விடுகிறார்... உங்கையிருந்து என்ன விடுப்புப்பாக்கிறாய்...? அவன் வந்து சோத்தைக் சாப்பிட்டன்...

சின்: (வந்து கொண்டு) வந்திட்டனணை பெத்தாச்சி.. எங்கைசோறு...

கிழ: அ...வந்திட்டியே...? இதென்னடா உன்ர கோலம்...? ஒரு ஆனவாகிலை துணியைக்கட்டி தலையைச் சீவிக்குளிக்கிறேல்லை... ஆனமுறையில வாய் வயித்தையும் கவனியாமல் அங்கை போய்நிண்டு என்ன விடுப்புப் பாக்கிறனி...?

சின்: விடுப்பில்லைப் பெத்தாச்சி, அந்த அண்ணை...

கிழ: எந்த அண்ணை...?

சின்: அதுதான் அந்தப் பாலசிங்கம் அண்ணை.. தங்கமலரக்கா வீட்டுக்கு வருவார்... அவர்...

கிழ: எடேய், தங்கமலர் உனக்கு ஆர்...? ஆ.. ஐயோ என்ர அப்பு! உனக்கு முறை கூடத்தெரியாமல் இருக்கே.. அந்தச் சிங்கிணி நோனா உன்னுடைய மச்சாளல்லே.. அதுபோக, அவள் உன்னிலும்பாக்க எத்தினையோ வயசு இளையவள்... அவளைப் பார்த்து அக்கா அக்கா... எண்டு சொல்லுறியே..

சின்: அவ பெரிய பெம்பிளையாயிருக்கிறா.. எங்கடை அடுத்தவீட்டுச் சின்னத்தங்கச்சி அக்காவைவிட இவ பெரிசா ''ம்'' மெண்டு தொக்கையா ஊதியிருக்கிறா.. அப்ப என்னெண்டு ''தங்கச்சி''யெண்டு கூப்பிடுறது..

கிழ: நீ என்னவோ ''அண்ணை''யெண்டியே, அது ஆரவன்..? அவன் எங்கை இருக்கிற பொடியன்..?

சின்: நீ சிரி. அப்பதான் சொல்லுவன்.. ...

கிழ: (மெதுவாகச் சிரித்துக்கொண்டு)அ, சொல்லு.. எல்லாம் சிரிப்புத்தான்.

சின்: ம்... அவர்.... நீ தோசைசுடுறத்துக்குகுழைப்பாய் அமெரிக்கன் மா, அதைப்போல என்னத்தையோ ஒரு களியை எடுத்துப் பாணிலை பூசிப்போட்டுச் சாப்பிடுறார்....

கிழ: நான் ஆள் ஆர் எண்டு கேக்கிறன். இவர் அவன்பாண்சாப்பிட்டதைச் சொல்றார்... ...

சின்: எல்லாத்தையும் கேளன் பெத்தாச்சி... ...

கிழ: சரி, சரி சொல்லு கேப்பம்...?

சின்: ம்......அதைச் சாப்பிடிறப்போ எனக்கும் ஒரு துண்டுதந்தார். ஐயோஅதை மூக்குக்குக் கிட்டவும் எடுக்க ஏலாது. பொல்லாத மணம். நான் வேண்டாமெண்டிட்டன். பிறகு அவர் மலரக்காவோட...... என்னவோ......எனக்குத் தெரியாது... ''கசுக்குப் புசுக்'' கெண்டு இங்கிலீசிலை பேசினார்.... எனக்கு விளங்கேல்லை... ம்...சோத்தை எடு பெத்தாச்சி......

கிழ: என்ர அப்பனுக்கு சோறு போட்டுத் தாறதுக்குத்தானே இந்தக்கத்துக்கத்திக் கூப்பிட்டன் (சிரித்துக்கொண்டு) ம்... கதைசொல்லுறதுக்கிடையிலை அவருக்கு ஒரு கண்டறியாத கோபம் வந்திட்டுது... கோவம்... சொல்ல வந்தது எனக்கென்னெண்டு தெரிஞ்சாத்தானே .... ....,? அவை இங்கிலீசிலை பேசினால் அதுக்கு நான் என்னசெய்ய?

சின்: ஏன்பெத்தாச்சிஅவை தமுழிலைபேசினால் என்ன...?

கிழ: நீயும் நானும் தமுழிலைதானே கதைக்கிறம். அதுபோதும், நீ சொல்லு...

சின்: அதுதான்... அவர் என்னவோ இங்கிலீசிலை கதைச்சார். அதுக்கு அவ, ''உங்க உவரை விட்டு வாங்குங்கோவன்... எண்டு'' என்னைக் காட்டித் தமுழிலை சொன்னா...

கிழ: ஆர் அவளோ......? ம்...புதுமை நடக்குதெடி பூநகரியாள் வாடியில எண்டாளாம். அவளோ அப்படிச் சொன்னது...!

சின்: ஓம்,அவதான் பெத்தாச்சி...

கிழ: வித்தையடி மாமி கொத்துதெடி கோழி......... பின்னை என்ன, பணம் வந்து பிடிபட்ட நேரத்தில வாய்க்கு றாங்கியான பேச்சு வருந்தான். அது வந்தால் மச்சானைத் தெரியுமோ...... மாமனைத்தெரியுமோ ... ம் பிறகு...

அவ அப்புடிச்சொன்னவுடனே அவர் என்னைக் கூப்பிட்டு, சின்னத்துரை நல்லபிள்ளைமாதிரி ஓடிப்போய் ஒரு சிகறேற்றுப் பக்கற்று ஒண்டு வேண்டிக்கொண்டு ஓடியா... எண்டு காசு தந்தார். நான் ..

கிழ; (கடுகடுத்த குரலில்) நீர் அவைக்குக் கூலிக்காறனாக... வேண்டிவந்துகுடுத்தீராக்கும்...

சின்: ஓம் பெத்தாச்சி...

கிழ: என்ன, ஓமோ...

சின்: ஏன் வேண்டியந்து குடுக்கப்படாதே..?

கிழ: சரி, சரி மிச்சத்தையும் சொல்லு...

சின்: ஓடிப்போய் வேண்டிக்கொண்டுவந்து பாத்தன். விருந்தையிலை இருந்து சிரிச்சுக்கொண்டு இருந்தினம்...

கிழ: (கோபமாக)ஆ..ஆ.. ஆட்டக்காறியோ...

சின்: ஆர் ஆட்டக்காறி...? அக்காவோ...? எணை அவ அப்படிஒண்டும் ஆடேல்லை.. சும்மாதான் கதிரையிலை இருந்தவ.. மெய்ய பெத்தாச்சி, அவஇன்னும்சடங்கு முடிக்கேல்லை... அதுக்கு முந்தி ஆம்பிளைகளோடை தனியக் கதைக்கப்படாதல்லே...என்னபெத்தாச்சி.

கிழ: (பெருமூச்சுடன்) அவளை விட்டிட்டு உன்ரை சங்கதியைச் சொல்லு...?

(அடுத்த இதழில் முற்றும்)

## வரப்பெற்றோம்

செல்வர் ந. சந்திரமோகன், த. சிவப்பிரகாசம், சி. கைலைநாதன் ஆகியோர் வெளியிட்ட 'வன்னியசிங்கம் சாந்தியடைய' நூல் கிடைக்கப்பெற்றோம்.

சி. இ. சதாசிவம்பிள்ளை வெளியிட்ட 'திருக்கேதீச்சர நாதர் கிள்ளைவிடு தூது' கிடைக்கப்பெற்றோம்.

பண்டிதர் திரு. க. வீரகத்தி அவர்கள் வெளியிட்ட 'கண்ணிற்காக்கும் காவலன்' கிடைக்கப்பெற்றோம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கலைவாணிக்குப் புஷ்பாஞ்சலி செய்யும் கீதாஞ்சலி நல்லையா


"ஒரு துறையில் ஒருவர் ஈடுபடுவதற்கு அத்துறையில் அவருக்கு முழு ஆர்வம் இருக்க வேண்டும். இந்த ஆர்வம் தானாகவே பிறந்துவிட்டால் அவர் எப்படியும் முன்னேறிவிட வாய்ப்புண்டு. இது போலத்தான் கலைத்துறையிலும் ஈடுபடுவதற்கு கலையார்வம் நிறைய இருக்க வேண்டும். இசை, நடனம், வாத்தியம் இவற்றில் ஓரளவு பூரணத்துவம் பெற்றால்தான் கலையில் நாம் ஈடுபட்டிருக்கின்றோம் என்று கருதமுடியும். வாய்ப்பாட்டில் நாம் காணமுடியாத, கிடைக்காத பல அபூர்வ ராகங்கள் இசைக் கருவிகளின் உதவியுடன் சில வேளைகளில் பிறந்துவிடுகின்றன" என்று கூறும் கீதாஞ்சலி வி. கே. நல்லையா அவர்களின்யாழ். கலாக்ஷேத்திரத்துக்குச் சென்றுபார்த்தால், அங்கு கலைத்தெய்வம் குடிகொண்டிருப்பதைக் காணலாம். கலாக்ஷேத்திரத்தின் இயக்க நாடியே இவர்தான்.

சின்னஞ்சிறு குழந்தைகள் பலரகமான இசைக்கருவிகளை வைத்துக் கொண்டு பயிற்சி செய்வதும் நடனங்கள் ஆடுவதும் அங்கு கண்கொள்ளாக் காட்சியாகும். கண்ணாலும் கையாலும்-ஏன் அங்கமெல்லாம் கதைசொல்லும் அக்குழந்தைகளைக் காணும்போதே எமது சிந்தையைப் பீடித்த களைப்பு ஆயாசமெல்லாம் அகன்று புத்துணர்ச்சி பெறுகின்றோம். இதற்கெல்லாம் அங்கு மூலகர்த்தாவாகத் திகழ்பவர்தான் கீதாஞ்சலி நல்லையா.

இந்தியாவில் இருக்கும் பொழுது தமது 15-வது வயதில் கலைத்துறையில்



பிரவேசித்த திரு. நல்லையா ஆரம்பத்தில் நாடகங்களுக்கு பிற்பாட்டு (பக்கப்பாட்டு) பாடுவதிலும் ஆர்மோனியம் வாசிப்பதிலும் ஈடுபட்டார். நடனம், வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின் ஆகிய துறைகளில் ஓரளவு தேர்ச்சிபெற்றுக் கொண்டு இலங்கை திரும்பிய அவர், 1947-ல் இலங்கையில் முதலாவது சங்கீத நடனஆசிரியராக சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் நியமிக்கப்பட்டார். அன்று தொடக்கம் திரு. நல்லையா, பல கல்லூரிகளுக்கும் சென்று சங்கீத நடனஆசிரியராக சேவை புரிந்து வந்தார். அரசாங்கம் இவரை ஐந்துபாடசாலைகளில் நியமனம் செய்திருந்தது. 1950-ல் வடஇலங்கை சங்கீத சபையினர் முதற்தடவையாக நடத்திய ஆசிரிய தராதரப்பத்திர பரீட்சையில் முதலாவதாக தேறிய மாணவர் இவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.




கதகளியின் மன்னரென ஈழமும் தமிழகமும் ஏகோபித்துக் கொண்டாடும் கலாமேதை கோபிநாத் இவரது குரு. இலட்சுமணநட்டுவனரிடம் பரதக்கலையும், மதுரை பெரியசாமியிடம் வாய்ப்பாட்டும், புத்துவாட்டி சோமசுந்தரனரிடம் வயலினிசையும், சென்னை சங்கீத பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏ. சுந்தரம் ஐயரிடமும் பக்தியுடன் வித்தை பயின்ற "கீதாஞ்சலி" வி. கே. நல்லையா, சென்னையிலேயே நடனமும் வயலினும் முறைப்படிகற்று ஈழம் திரும்பி கலைவளர்க்கத் தொடங்கினர்.

இப்பொழுது 75 மாணவர்கள் யாழ். கலாக்ஷேத்திரத்தில்கலைக்கல்விபயின்றுவருகிறார்கள். கீதாஞ்சலிநல்லையா அவர்களுக்கெல்லாம் ஒரு கலாஜோதியாகத் திகழ்ந்து வருகின்றார். பிரதமர்கள், மந்திரிகள், கல்விப் பகுதி முதல்வர்கள் ஆகியோரிடமும் இன்னும் எண்ணிறந்தவர்களிடமும் பாராட்டைப் பெற்றவர் கீதாஞ்சலி. பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் இலங்கைக்கு வந்திருந்தபொழுது, கொழும்புத் திட்டப் பொருட்காட்சியில் இவரது கைவண்ணம் (காவடி) ஒரே நாளில் மூன்று தடவைகளாகத் தொடர்ந்து நடத்தப்பட்டு புகழ்பெற்றது. யுனெஸ்கோகலைநிகழ்ச்சிகளிலும் இவர் பாராட்டும் புகழும் பெற்றிருக்கிறார்.

எமது குழந்தைகளுக்கு இளம் வயதிலேயே கலையார்வம் ஊட்டவேண்டியது எமது முக்கியகடமை என்பது இவரின் கருத்தாகும்.

பழகுவதற்கு இனிய சுபாவமிக்க கீதாஞ்சலி நல்லையா அவர்கள், கலையை தனக்கு மட்டுமின்றி பலருக்கும் தெய்வானுகூலமாக்கி வருகின்றார். யாழ். கலாக்ஷேத்திரத்தின் ஐந்தாண்டு நிறைவு விழாவை கடந்த நவராத்திரி தினத்தில் கொண்டாடியதுடன் தொடர்ந்து கலைக்கு ஒப்பற்ற பணிபுரிந்துவரும் வி. கே. நல்லையா அவர்கள் ஈழம் பெற்ற பாக்கியம் என்றே சொல்வோம்.

— மகான்


REGAL--JAFFNA
NOW SHOWING!
STEWART GRANGER
STANLEY BAKER
in
SODOM
AND GOMORRAH
(Techni Color)


நாடக விமர்சனம்

# "காற்ருடி"

"அண்ணு! உனக்குப் பெண்ணைக் கொடுத்தேன். அவளை நீ மண்ணுக்காதே. இப்போது கண்ணற்று நிற்கும் உனக்கு என் கண்களையும் தருகிறேன்; ஆனல் உன் கருத்தை மட்டும் இழக்காதே!"

சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி கவின் கலைக் கழகத்தினரால்மேடையேற்றப்பட்ட 'காற்ருடி' நாடகத்தில் ஒரு கச்சிதமான கட்டம்தான் இது.

அண்மையில் சுன்னுகத்தில் நடைபெற்றசாகித்திய விழாவில் இடம்பெற்ற இந்நாடகத்தில் சொற்சுவையும், பொருள்நயமும் நிறைந்த இப்படியான பல உணர்ச்சி மிக்க வசனங்கள் வசனத்தை எழுதிய ஆசிரியர் ஆ. கல்யாணசுந்தரேசன் நாடகஎழுத்தாளர் வரிசையில் இந்நாடகத்தின் மூலம் நிலையான ஓர் இடத்தைப் பெறுகிறார் என்று சொல்லும் விதத்தில் அருமையாக வசனத்தை அமைத்துள்ளார்.

சிங்கப்பூர் சின்னத்தம்பியர் மகன் மூர்த்தி ஒருவேலையற்ற பட்டதாரி. அவன் தனது காதலியால் நிராகரிக்கப்பட்டு, மனவுடைவினுல் மதுவை அணைத்துக் கொள்கிறான். அவன் தம்பி அவனைக்காப்பாற்றி நீலா என்ற அடக்கமான பெண்ணை திருமணம் செய்து வைக்கிறான். திருமணத்தின் பின் மூர்த்தி பழைய பல்லவிதான். இறுதியில் விபத்தொன்றில் மூர்த்தி தன் கண்களையே இழக்கிறான். அண்ணனுக்காக தன் கண்களையேதியாகம் செய்கிறான் அவன் தம்பி. காற்று இல்லாதபோது இயங்கமுடியாமல் இருக்கின்ற 'காற்ருடி' போல் தம்பிஎன்கிற காற்று இல்லாமல் அண்ணன் என்ற 'காற்ருடி' இயங்காதென்ற கதைதான்!

நடித்த மாணவர்களை எல்லாம் நல்லமுறையில் பழக்கி எடுத்திருக்கிறார் 'டைரக்டர்' கல்யாணசுந்தரேசன்!

கதா பாத்திரமேற்று நடித்த எஸ். சண்முகநாதன் குறைசொல்ல முடியாதவாறு நடித்திருக்கிறார். நீலாவாக நடித்தவர் — பாராட்டுக்குரியவர்! தாய்மார்களாக நடித்தவர்கள் சபையோரின் வயிற்றைப்புண்ணுக்கிவிட்டார்கள்.

'புரோக்க'ராக நடித்தவர் நாடகத்தின் உயிர் நாடி! நாடகம் 'சறுக்கி' விழப் பார்க்கும் கட்டங்களிலெல்லாம் 'தூக்கி' விடுபவர்இவர்தான். இப்பாத்திரமேற்று நடித்த தில்லைநாதன் ஒன்றைமட்டும் கவனிக்க வேண்டும்- 'ஓவராக'ப் போவதால் சில தடவைகளில் ரசிகர்களின் ஆத்திரத்துக்குள்ளாகிவிடுகிறார்.

செல்வி சித்திரா துரைராசாவின் நடனம் கண்களுக்கோர்கவர்ச்சியான கட்டம்!

மொத்தத்தில்— ஈழத்தில் தயாராகி மேடையேற்றப்பட்ட நல்லநாடகங்கள் வரிசையில் இந்நாடகத்தையும் சேர்த்துக்கொள்ளலாம்.

பாமா

## கறை போக்க

பளபளவென்று பாலிஷ் செய்திருக்கும் மேஜை நாற்காலியின் மேல் சுடுகிற தம்ளரை வைப்பதால் ஏற்படும் கறைகளுக்கு இலுப்பெண்ணையில் கொஞ்சம் உப்பைப் போட்டுக்குழைத்து அந்தக் கறைகளின் மேல் பூசி இரண்டு மூன்று மணிநேரம் அப்படியே ஊறவிட்டு பிறகு பழைய துணியால் துடைத்தால் கறை போய்விடும்.

○

## வயிற்றுக்கடுப்புக்கு மருந்து

இளநீரில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து [illegible]டால் வயிற்றுக்க[illegible] நீங்கும்.

## நூல் நிலையம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். சுப்பிரமணியம், ஆர். நவரத்தினம்ஆகியோர் எழுதிய கட்டுரைகள் நன்கு தெளிவுபடுத்துகின்றன. கல்லூரியுடன் தொடர்பு கொண்ட மற்றுமிரு பெரியார்களான அதிகார் செல்லமுத்து, திரு. ஈ. முருகேசம் பிள்ளை ஆகியோரின் மறைவு குறித்தும் விசேடகட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன. கல்லூரிச் சஞ்சிகையில் காணப்படும் சகல அம்சங்களும் இச்சஞ்சிகையில் பொருந்தியுள்ளன. 'பாரதத்தின் தீர்ப்பு' என்ற கட்டுரையை எழுதிய கௌரிகாந்தன் தர்க்கவிவகார சாமர்த்தியமாக தான் எடுத்துக் கொண்ட விஷயத்துக்கு ஆதாரமாகப் பல சம்பவங்களை பாரதக்கதையில்திருஷ்டாந்தம் எடுத்துக்காட்டி எழுதியிருக்கிறார். பஞ்சபாண்டவர் என்றால் தெரியாதா, கட்டில் கால்போல மூன்றுபேர் என்று சொல்லி இரண்டு விரல்களைக்காட்டி பின்பு அதையும் மடக்கி பஞ்சபாண்டவரையே முழுசாக முழுங்கிவிடும் கெட்டிக்காரனைப் போல, பாண்டுபுத்திரர்களுக்கு இப்படி உயிரோடே அரக்கு மாளிகை கட்டி வஞ்சம் தீர்ப்பதற்கு அப்படி என்ன அவசியம் வந்தது என்று பாண்டவர் கட்சி ஆட்கள் கேட்கமாட்டார்கள். ஏன், மாணவன் தானே!

கானம்

○

### வரப்பெற்ருேம்

வடமாகாண ஆசிரியர் சங்க ஐம்பதாவது வருடாந்த அறிக்கை 1964—1965.

○

இளம்பிறை (இலக்கியமாத சஞ்சிகை) அருள் வாக்கி மலர். ஆசிரியர்: எம். ஏ. ரஹ்மான். தனிப்பிரதி சதம்30.

○

[illegible] ஆசிரியர்: க. இராமநாதபிள்ளை.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)
தீவொளி (நுவரேலியா) ராஜா (யாழ்ப்பாணம்) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 10, 2, 6, 9-30 மணிக்கு
தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
"நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்"
எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த

விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்ட்மென் கலர்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தபாற்கந்தோர் புதிய கட்டடம்

வவனியா, சனி

முல்லைத்தீவு தபாற்கந்தோர் விரைவில்புதிய கட்டடத்தில் இயங்கவிருக்கிறது. தற்போதிருக்கும் கட்டடம் போதிய வசதியற்றதாக விருப்பதாலும் பழையதாக விருப்பதாலும் ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் கஷ்டத்தைக் கொடுத்து வந்ததாலுமே இதற்கென புதிய கட்டடம் கட்டப்படவிருக்கிறது.

பரந்தனிலும் நவீன வசதிகளைக் கொண்ட புதிய தபற்கந்தோரொன்று கட்டப்படவிருக்கிறது.

வவனியா தபால்சேவை ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் திரு. கே. கே. இராமச்சந்திரனின் முயற்சியாலும் வவனியா, கிளிநொச்சி ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த எம். பி.க்களின் முயற்சியினாலுமே இரு தபற்கந்தோர்களுக்குமான புதிய கட்டடங்கள் கட்டப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

## மண்டலாபிஷேகம் முடிவு

மட்டக்களப்பு, சனி

பிரசித்திபெற்ற மட்டக்களப்பு ஆனைப்பந்தி சித்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த நாற்பத்தைந்து தினங்களாக சிறப்பாக நடைபெற்றுவந்த மண்டலாபிஷேகம் கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்தது.

மகாகும்பாபிஷேகம் கடந்த மாதம் ஆரம்பமானது.

### நன்றி

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பளைக்கு நான் பஸ்ஸில் சென்ற பொழுது, பஸ்ஸில் நான் தவறவிட்ட கைப்பையை கண்டெடுத்துக் கொடுத்த யாழ்ப்பாணம் கிழக்கு இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த பஸ் சாரதி இளையதம்பி, பஸ்கண்டக்டர் கந்தசாமி ஆகியோருக்கு எனது உளம்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். கைப்பைக்குள் ரொக்கப்பணம் 525 ரூபாவும், விலை உயர்ந்த பேனா உட்பட பல பொருள்களும், தஸ்தாவேஜுகளும் பத்திரமாக இருந்தன. மு. கனகரத்தினம், தெல்லிப்பளை.

1181

### சன்மானம்

சங்கரத்தையிலுள்ள நா. இரத்தினவேலுவுக்குச் சொந்தமான M 886638 இலக்க கூப்பனும் செல்லம்மாவுக்குச் சொந்தமான M886635 இலக்க கூப்பனும் M886636 இலக்க கூப்பனும் யாழ்ப்பாணத்தில் காணமற் போய்விட்டது. கண்டெடுப்பவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானமுண்டு.

1180

## பஸ் ஊழியரின் பெருந்தன்மை

யாழ்ப்பாணம், ஞாயிறு

இ. போ. ச. பஸ் ஒன்றில் ரொக்கப்பணம் 525 ரூபா உட்பட விலை உயர்ந்த பொருள்களும் தஸ்தாவேஜுகளும் கொண்ட கைப்பையை தவறவிட்ட ஒரு பஸ் பிரயாணிக்கு அந்தப் பை மீண்டும் கிடைத்திருக்கிறது. பஸ் சாரதி இளையதம்பியும் பஸ்கண்டக்டர் கந்தசாமியும் இதனைக் கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

தெல்லிப்பளை புகையிரத நிலையத்தைச்சேர்ந்த திரு. மு. கனகரத்தினம் நேற்று முன்தினம் பஸ்ஸில் பிரயாணம் செய்த பொழுது கைப்பையை தவறவிட்டதாகவும், அதிர்ஷ்டவசமாக, இதனை பஸ் கண்டக்டரும் சாரதியும் பஸ்ஸில் கண்டெடுத்து கிழக்கு டிப்போவில் ஒப்படைத்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இப்படியான பஸ்சாரதிகளினதும் கண்டக்டர்களினதும் தொண்டினால் பொதுமக்கள் பத்திரமாக பிரயாணம்செய்யமுடிகிறது என்று கைப்பையை தவறவிட்டு பின்னர் பெற்றுக்கொண்ட கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

## ஹொலிவூட் நடிகை மரணம்

ஹொலிவூட், அக் 23

பிரபல ஹொலிவூட் நடிகை மேரி மக்டொனல்ட் தமது இல்லத்தில் மரணமடைந்திருக்கக் காணப்பட்டார். முதலில் இவர் தற்கொலை செய்திருக்கக்கூடுமென சந்தேகிக்கப்பட்டது. ஆனால் அவ்விதம் ஊர்ஜிதப்படுத்துவதற்கு ஆதாரமில்லாது போய்விட்டது.

42 வயதுடைய இந்த ஹொலிவூட் நடிகை 8 தடவைகள் திருமணம் செய்திருந்தார். இவர் இறந்திருந்ததை முதலில் அறிந்தவர் இவரது 8-வது கணவரான திரைப்படத் தயாரிப்பாளர் திரு. டொனல்ட் டெய்லர்.

## நஷ்டஈடு கிடைக்கும்

கொழும்பு, சனி

''புனித நகரமாகிய கதிர்காமத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பொதுமக்களுக்கு அரசாங்கம் ரூ. 1000 நஷ்டஈடு வழங்கும். இப்பணத்தைக் கொண்டுபாதிக்கப்பட்டவர்கள் வீடுகள் கட்டலாம். காணிகளை விட்டுச் செல்பவர்களுக்கு தற்காலிக இருப்பிட வசதிகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். கட்டாயமாகச் சுவீகரிக்கப்பட்ட வீடுகளுக்கும் காணிகளுக்கும் நஷ்டஈடு விரைவில் வழங்கப்படும்'' என்று உதவி காணிமந்திரி இன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேவை

தொழிற்சாலையில் வேலைசெய்வதற்கு 18 வயதுக் குட்பட்ட ஆண்கள் தேவை. விபரங்களுக்கு 30-10-65-க்கு முன் நேரில் வரவும். கிளிநொச்சி, பரந்தனில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

ராஜா கோப்பரேஷன்
உற்பத்திப் பகுதி
பரந்தன். 1214

# பதினறு பதவிகளுக்கு 2000பேர் விண்ணப்பம்

கொழும்பு, சனி

உணவு, விவசாய பகுதி பதினறு விலைக்கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர்கள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரியிருந்தது. ஆனல் இப்பதவிகளுக்கு இரண்டாயிரம்பேர் மனுச் செய்துள்ளனர்.

கிடைக்கப்பெற்ற மனுக்களில் 700 பேரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பதவிகளுக்கு இவர்கள் போதிய தராதரம் பெருததே காரணமாகும். மிகுதியான சுமார் 1300 பேரின் மனுக்களை பொதுச் சேவைக் கமிஷனினல் நியமிக்கப்பட்ட ஏழு பேர் கொண்ட கமிட்டியொன்று பரிசீலனை செய்து வருகிறது.

நியமனங்கள் பெறுவதில் அரசியல் தலையீட்டைத் தவிர்ப்பதற்காகவே இக் கமிட்டி நியமிக்கப்பட்டதாக உணவுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

## இலங்கைக்கு 256 புதிய பஸ்கள்

லண்டன், அக். 23

பிரிட்டனிலிருந்து 500,000 பவுண் பெறுமதியான 256 புதிய லேலண்ட் பஸ்களும். உப உறுப்புக்களும் அடுத்த மாதம் முதல் வரவிருக்கின்றன. இவற்றுடன் இங்கு சேவையிலுள்ள லேலண்ட் பஸ்களின் எண்ணிக்கை 2,400 ஆக உயரும். இவற்றில் 550 இரட்டைத்தட்டு பஸ்கள் லண்டன் போக்குவரத்துச்சபையிடமிருந்து வாங்கப்பட்டவையாகும்

இ. போ. ச. கோரிய 256 லேலண்ட் பஸ்களும் அடுத்த மாதம் முதல் மாதாந்தம் 60 பஸ்கள் வீதம் இலங்கைக்குக் கப்பலேற்றப்படும் என்று லண்டனில் அறிவிக்கப்பட்டது. இதுவரை வேறெந்த ஆசிய நாடு லேலண்ட் மோட்டார்கார்ப்பரேஷன் ஸ்தாபனத்தாரிடமிருந்து இவ்வளவு பெருந்தொகையில் பஸ்களைப் பெற்றது கிடையாதென்று தெரிவிக்கப்பட்டது.

## இப்படியும் நடக்கிறது!

லண்டன் அக். 23

தன்னுடன் 'டுவிஸ்ட்' விளையாட தனது கணவர் மறுத்த காரணத்தினல்தான் விவாகரத்து வழக்குத் தாக்கல் செய்யவேண்டி ஏற்பட்டது என்று முன்னள் அழகுராணி ஜீன் பெல்லிங் இங்கு ஒரு நீதி மன்றத்தில் கூறினர்.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதியரசர் திருமதி லேன், திரு. பெல்லிங் வேறு ஒரு பெண்ணுடன்தொடர்பு கொண்டதே உண்மைக் காரணம் என்றும் கூறினர்.

இந்த வழக்கில் திரு. பெல்லிங் குறைந்தளவுதாபரிப்பு பணம் செலுத்தவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

## ஒரே மாதம்!

கம்புறுபிட்டியா, சனி

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு இன்னும் ஒரு மார்தகாலத்துக்குள் குறைந்துவரும் என்று ஹக்மன எம். பி. திரு. சிறிசேன ஹெட்டி இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்:

உணவுப் பொருள்களும், துணிவகைகளும் விரைவாக பொதுமக்களுக்கு தாராளமாகக் கிடைக்கும். என்றும் அவர் கூறினர்.

## கந்தசஷ்டி விழா

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் பறுளை முருகமூர்த்தி கோவிலில் கந்தசஷ்டி விழா நாளை திங்கட்கிழமை தொடக்கம் ஆறு நாட்களுக்கு நடைபெறும். சனிக்கிழமை சூரன் போர் நடைபெறும். அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை திருக்கல்யாணம்.

## கூரை காற்றில் பறந்தது

நிவிட்டிக்கல, சனி

இங்கு வீசிய பலத்த காற்று, கொல்லன்ன வித்தியாலயத்தைச் சேர்ந்த ஒரு கட்டிடத்தின் முழுக்கூரையையும் அப்புறப்படுத்திவிட்டது. இச்சம்பவம் இரவு நேரத்தில் நிகழ்ந்ததால் மாணவிகள் எவரும் பாதிக்கப்படவில்லை.

## அரசாங்க அதிபர்களுக்கு கூடுதலான சம்பளம்

கொழும்பு, சனி

அரசாங்க அதிபர்களுக்கு கூடுதலானசம்பளம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்க அதிபர்களின் சம்பள உயர்வுகுறித்து நேற்றுக் கூடிய மந்திரிசபை விவாதித்தது. கூடுதலான சம்பளம் ''அலவன்ஸ்'' விதமாக வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ்ப்பாணத்தில் ஐ. நா. தினக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

ஐக்கியநாடுகள் தினத்தையொட்டி யாழ். இலங்கை அமெரிக்க கலாச்சார நிலையத்தில் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். திருவாளர்கள் எஸ். கதிர்காமர், சி. எப். ஜேறிச்சட்ஸ் ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்து கொள்கின்றனர். திரு. எஸ். ஆர். கனகநாயகம் கூட்டத்திற்கு தலைமை தாங்குவார்.

## உப்புநீரை குடிநீராக்கும் முறை

### வெயிலைப் பயன்படுத்த யோசனை

நியுயோர்க், அக். 23

உப்பு நீரை நல்ல தண்ணீராக மாற்ற வெயில் விசையைப் பயன்படுத்துவதே தண்ணீர் தேவைகளை நிறைவு செய்யவுள்ள சிறந்த வழி என்று இந்தியப் பாதுகாப்பு இலாகா ஆராய்ச்சி அதிகாரி திரு. கே. வி. மணி கருதுகிறார்.

அமெரிக்க வெளி, உள் விவகார இலாகாக்களின் ஆதரவில் இங்கு நடைபெறும் தண்ணீரில் கைப்பு அகற்றுவதுபற்றிய முதல் அனைத்துலகக் கருத்தரங்கில் திரு. மணி கலந்துகொள்வார்.

அவர் மேலும் கூறியதாவது: வெயிலைப்பயன்படுத்தி நீரைக் காய்ச்சி வடிக்கும் உப்பு நீக்கும் இயந்திரங்களே விரைவில் கிராமங்கள் பலவற்றில் புழக்கத்துக்கு வருமென நம்புகிறேன். இவ்வகை இயந்திரங்களை இயக்குவதுமலிவு. அணுவிசையையும் மற்ற வழக்கமான எரிபொருட்களையும் பயன்படுத்தும் முறைகளுக்கு ஏற்படுவதை விட இம்முறைக்கு முதலில் செலவு குறைவு. மேலும், மேற்சொன்ன பிறமுறைகளில் அடிக்கடி எரிபொருட்கள்போடவேண்டும்.

## அண்ணு விழா

அறிஞர் அண்ணுதுரையின் 57-வது பிறந்த தின விழா கொழும்பு விவேகானந்த மாவித்தியாலயமண்டபத்தில் திரு. ஆ. நடராசா தலைமையில் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் இவ்விழாவுக்கு சமுகமளித்திருந்தனர்.

அண்ணு விழாவிற்கு ஒரு சிறப்பளிப்பதாக இடம் பெற்றிருந்த, நடன கலாமணி கே. என். நவரத்தினத்தின் மாணவர்களின் நாட்டிய விருந்தைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. மூன்றே மூன்று நடன நிகழ்ச்சிகள் தான் இடம் பெற்றிருந்தன என்றாலும் அவை முத்தாக அமைந்திருந்தன. நடன நிகழ்ச்சிகளில் முதலாவதாக செல்வி கஸ்தூரி சின்னையா சிவம் என்ற மாணவியின் தமிழ்த்தாய் வணக்க அபிநயம் மிகவும் அற்புதமாக அமைந்து அனைவரது பாராட்டையும் பெற்றது. இந்த நடனத்திற்குப் பின்னணியாக ''யாமறிந்த மொழிகளிலே...'' என்ற திருமதி லக்ஷ்மி நடராசனின் இன்னிசை மிக எடுப்பாக இருந்து ரசிகர்களைக் கவர்ந்தது. இதைத் தொடர்ந்து செல்வி கலாதேவி நடராசாவின் தில்லானவும் பாராட்டக் கூடியதாகஇருந்தது. கடைசியாகநடை பெறவிருந்த பாம்பாட்டி நடனத்திற்கிடையில் ஏற்பட்ட காலதாமதத்தைத் தவிர்த்திருக்கலாம். முதல் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்களே மீண்டும் பங்கு கொள்ள வேண்டியிருந்ததால் ஒப்பனை மாற்றிக் கொள்வதற்காக இத்தாமதம் ஏற்பட்டிருக்கலாம். ஆனல் அந்த நேரத்தைப் பயன் படுத்திக் கொண்டு தேவையற்ற அறிவிப்புக்களைத் தவிர்த்து ரசிகர்களின் பொறுமையைச் சோதிக்காமல் தகுந்த ஒரு இசை நிகழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தால் அல்லது நடனத்துக்குப் பின்னணி இசைத்தவர்களே தமது இசையை இடையீடு தெரியாதவாறு உபயோகித்திருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

கடைசியாக இடம்பெற்ற ''பாம்பாட்டி நடனம்'' மிகவும் தொன்மை வாய்ந்ததெனினும் இதை வெகு திறம்பட நடித்துக்காட்டிய செல்வன் ஸ்ரீஸ்கந்தா கந்தசாமி, செல்விகள்: கலாதேவி நடராசா, உமாராணி நடராசா ஆகியோர் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்களே. மொத்தத்தில் அண்ணு விழாவைச் சிறப்பித்த இந்த நடன நிகழ்ச்சியை அளித்த நடனகலாமணி நவரத்தினத்தையும் அவரது மாணவர்களையும், உதவியாளர்களான திருவாளர்கள்: பாபு ஹரிகரன் (மிருதங்கம்), ரி. சச்சிதானந்தம் (ஒப்பனை), பின்னணிபாட்டு படித்த திருமதி லக்ஷ்மி நடராசனையும் பாராட்டத்தான் வேண்டும்.

விழாவைச் சிறப்பாக்கிய இன்னுமொரு அம்சம் 'அண்ணுமலர்' என்ற நூல்வெளியீடாகும். அனைவரும்வியக்கத்தக்க வகையில் மூவர்ண அட்டைகொண்ட அருமையான மலர் ஒன்றை வெளியிட்டிருந்தார்கள். அண்ணுவின் நூல்களிற் சிலவும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

இவ்வளவு சிறப்பான அம்சங்களைக்கொண்ட இப் பெருவிழாவை ஒரு இளைஞரான வேலணை வீரசிங்கம் முன்னின்று நடத்தி வைத்தார். இவ்விழாவில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் உட்பட பலர் கருத்துரை வழங்கியிருந்தனர்.

— ''மதி''

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org